பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 04 புதன்கிழமை 19.06.2019 கதிர் 226

**இது ரகசியம் அல்ல!**

கம்பரெலிய திட்டத்தின் கீழ் அந்த வீதியைச் செப்பனிட்டோம், இந்தக் கோயிலைக் கட்டினோம், இந்தக் கட்டடத்துக்கு கல் வைத்தோம் என்றும் நம் எம்.பிக்களும், அவர்களின் அல்லக்கைகளும் தினசரி ஆரவாரம் பண்ணிக் கொண்டிருக்கின் பக்கம் 02 »

# மகாசங்கத்தினர் சொல்வதையே ஆட்சியாளர்கள் செய்யவேண்டும்!

## ஜனாதிபதி மைத்திரி நேற்று அதிரடிக் கருத்து

கொழும்பு, ஜூன் 19

ஆட்சியாளர்கள் மகாசங்கத்தினரின் ஆலோசனைகளை ஏற்று அதற்கமைய செயற்படவேண்டும். அவ்வாறு செய்வார்களானால் அவர்கள் நாடு ஒருபோதும் தவறான பாதையில் பயணிக்காது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். பக்கம் 11 »



## அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரி 'கப்சிப்'

கொழும்பு, ஜூன் 19

நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நாடாளுமன்ற தெரிவுக்குழு விவகாரம் உள்ளிட்ட சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பான எந்தவொரு கருத்தையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைக்கவில்லை என்றும், இதனால் அமைதியான முறை பக்கம் 11 »

**வாசகர்களுக்கு வணக்கம்**

- இன்று முதல் அச்சுப் பிரதிக்குப் பதிலாக சமூக வலைத்தளங்கள் ஊடாக - இலத்திரனியல் பிரதி வாயிலாக - சந்திக்கிறோம்.

'வாட்ஸ் - அப்', 'வைபர்' மூலம் பத்திரிகை இதழைப் பெற விண்ணப்பித்தவர்களின் தொடர்பு இலக்கங்கள் ஒழுங்கு நிரல் படுத்தப்படுகின்றன. ஓரிரு நாள்களுக்குள் அனைவருக்கும் இலவசப் பிரதிகள் அதிகாலையிலேயே வந்து சேரும். அதுவரைப் பொறுத்திருங்கள்.

மின்னஞ்சல் முகவரி மூலம் பெறுவதற்கு இன்று அதிகாலை வேளை வரை விண்ணப்பித்த அனைவருக்கும் இதழ்கள் அனுப்பப்படுகின்றன. யாருக்கேனும் அவை வந்து சேரவில்லை எனின் தயவு செய்து எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இலத்திரனியல் இதழைப் பெறவும் அது குறித்து ஊடாடவும் kalaikkathirpaper@gmail.com என்ற விலாசத்தின் ஊடாக அல்லது 0094 - 21 222 3000 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகத் தொடர்பு கொள்ளவும்.

- நிர்வாகி -

## குடாநாட்டின் பாதுகாப்பு உறுதியாகவே இருக்கிறது

### கூறுகின்றார் யாழ். படைத் தளபதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்.குடாநாட்டின்பாதுகாப்பைப் பலப்படுத்தி அனைத்து மக்களதும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி உள்ளதாக மாவட்ட பாதுகாப் பக்கம் 11 »

## முஸ்லிம் கடைகளுக்கு மக்களே செல்லாதீர்கள்!

### அஸ்கிரிய மாநாயக்கர் சர்ச்சைப் பேச்சு

கொழும்பு, ஜூன் 19

முஸ்லிம் வர்த்தக நிலையங்களைப் பகிஷ்கரிக்குமாறும் அவர்களின் கடைகளில் உணவுகளை உண்ணவேண்டாமென்றும் அஸ்கிரிய பீடத்தின் மாநா பக்கம் 02 »



## வாகனத்தையும் வீட்டையும் சம்பந்தன் எடுத்துவிட்டார்!

### சபையில் மஹிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 19

எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கப்பட்ட வாகனம் மற்றும் வீட்டை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இரா.சம்பந்தன் எடுத்துவிட்டார் என மஹிந்த பக்கம் 11 »

## விமலின் மூளையை பரிசோதனை செய்க!

### நாடாளுமன்றில் ரிஷாத் கோரிக்கை



கொழும்பு, ஜூன் 19

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸவின் மூளையைப் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பக்கம் 11 »

## தீர்க்கமான முடிவொன்றை எடுக்கவேண்டும் மைத்திரி!

### மஹிந்தவின் பங்காளிகள் கூட்டாக வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 19

அதிகாரப் போட்டியால் நாடு நாசமாகின்றதை நாம் விரும்பவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்க்கமான முடிவொன்றை உடனடியாக எடுக்கவேண்டும். - இவ்வாறு மஹிந்த அணியின் பங்காளிக் பக்கம் 11 »

## மிதக்கும் மின்சார நிலையத்தால் அமைச்சரவையில் வாக்குவாதம்

கொழும்பு, ஜூன் 19

மிதக்கும் மின்னுற்பத்தி நிலையத்தைக் கொண்ட கப்பலில் இருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்வதற்கான பக்கம் 11 »

## ஜனாதிபதி வேட்பாளர் குறித்து யாரும் வாய் திறக்கவேகூடாது!

### வாய்ப்பூட்டு போட்டார் ரணில்



கொழும்பு, ஜூன் 17


ஜனாதிபதித் தேர்தல் இன்னும் அறிவிக்கப்படாத நிலையில், ஜனாதிபதி பக்கம் 11 »

## 60 கிலோ கஞ்சா சிக்கியது

யாழ்ப்பாணம், ஜூன் 19

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொண்டமானாறு, கெருடாவில் பகுதியில் பாழடைந்த கிணற்றில் இருந்தும் அதற்கு அரு பக்கம் 11 »

## சிறைக்குள் 'செல்பி' சிக்கினார் துமிந்த!




கொழும்பு, ஜூன் 19

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர படுகொலை வழக்கின் மரண தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் பக்கம் 11 »

## ஜே.வி.பியின் பிரேரணைக்கு மஹிந்த தரப்பினர் ஆதரவு!

கொழும்பு, ஜூன் 19

அரசுக்கு எதிராக ஜே.வி.பியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதற்கு கூட்டு எதிரணி நேற்றுத் தீர்மானித்துள்ளது. கூட்டு எதிரணி பக்கம் 11 »

## சுமந்திரனோ, செல்வமோ டில்லிக்குப் பேச வந்தால் ஈழத் தமிழருக்கு மோடி அரசு நன்மை செய்யாது!

### சரவணபவனுக்கு அர்ஜுன் சம்பத் பதில்

சென்னை, ஜூன்19

"சுமந்திரனையோ, செல்வத்தையோ டில்லிக்குப் பேச அனுப்பினால் ஈழத் தமிழர்களுக்கு மோடி அரசு நன்மை ஏதும் செய்ய முனையாது."

- இப்படித் தெரிவித்திருக்கிறார் தமிழகத்தின் இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத். பக்கம் 11 »

# கொக்குவில், மானிப்பாய், சுன்னாகதில் இடம்பெற்ற வாள்வெட்டுகள் தொடர்பில் 11 பேர் விளக்கமறியலில்

## தனுரொக்கும் நீதிமன்றத்தினால் தடுப்பில்

கொக்குவில், மானிப்பாய் மற்றும் சுன்னாகம் ஆகிய மூன்று இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைகளை அடுத்துக் கைது செய்யப்பட்ட 10 சந்தேகநபர்களும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றிரவு முற்படுத்தப்பட்டனர். அவர்கள் 10 பேரையும் வரும் ஜூலை முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல், அவர்களை அடையாள அணிவகுப்புக்குட்படுத்துமாறும் அறிவுறுத்தினார்.

அத்துடன், கொக்குவில் ரயில் நிலைய அதிபர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் தனுரொக் என்ற இளைஞர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரையும் வரும் வரும் ஜூலை முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், அவர்களை அடையாள அணிவகுப்புக்குட்படுத்துமாறும் அறிவுறுத்தினார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் மஞ்சவனப்பதியில் நேற்று மாலை வீடொன்றுக்குள் புகுந்த கும்பல் ஒன்று அங்குள்ளவர்களை அச்சுறுத்தும் வகையில் வீட்டிலிருந்த பெறுமதியான இலத்திரனியல் பொருள்கள் உள்ளிட்ட தளபாடங்களை அடித்து உடைத்து பெற்றோல் ஊற்றிக் கொளுத்தியது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 9 பேர் கொண்ட கும்பலே இந்தத் தாக்குதலை நடத்தியது. அவர்கள் வினோதன் (ஆவா) என்பவரின் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

அதேசமயம், தாக்குதலுக்குள்ளான வீடு தனுரொக் என்றழைக்கப்படுபவரின் உறவினர்கள் வசிக்கும் வீடு என்பதுடன் அங்கு நடத்தப்பட்ட மூன்றாவது தாக்குதல் இது என்றும் பொலிஸார் கூறியிருந்தனர்.

இந்தத் தாக்குதலை நடத்திய கும்பல், கொக்குவில் சந்திக்கு வந்து சில நிமிடங்கள் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலையடுத்து மானிப்பாய், சுதுமலைப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் அங்கு இருந்த ஆண் ஒருவரையும் பெண் ஒருவரையும் வாள்களால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றது.

அதனையடுத்து சுன்னாகம் ஐயனார் கோவிலடியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கும்பல் ஒன்று அங்கு இருந்த பெறுமதியான பொருள்களை அடித்துச் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றது. அந்த வீட்டில் வசிக்கும் இளைஞர் ஒருவர், கடந்த பெப்ரவரியில் கொக்குவில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து வான் உள்ளிட்ட வற்றுக்கு தீவைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றப் பிணையில் வெளிவந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து கொக்குவில் பகுதியில் உள்ள மைதானம் ஒன்றில் கரப்பந்து விளையாடிவிட்டு பிறந்த நாள் கொண்டாடிய 10 பேரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் ஆவா குழுவில் முன்பு இருந்து அடாவடிகளில் ஈடுபட்டு வந்த அசோக் மோகன் என்பவரும் அடங்குகிறார் என்று பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர். சிலர் மதுபோதையில் இருந்தனர் என்றும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கொக்குவில் ரயில் நிலைய அதிபர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் மானிப்பாயைச் சேர்ந்த தனுரொக் என்ற இளைஞனை பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்கு ஒன்றில் முன்னிலையாகி விட்டு வீடுதிரும்பிய போது, அவரைப் பொலிஸார் கைதுசெய்திருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 11 சந்தேகநபர்களும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றிரவு 8.30 மணியளவில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளும் முன்னிலையாகினர்.

இதேவேளை, 11 சந்தேகநபர்கள் தொடர்பிலும் தகுந்த ஆதாரங்கள் இல்லாத நிலையில் கைது செய்துள்ள பொலிஸார், வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் தப்பிக்க வழிவகை செய்கின்றனர் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பெரும்பலான வன்முறைச் சம்பவம் தொடர்பிலான வழக்குகள் பொலிஸாரின் இந்தச் சோடிப்பு நடவடிக்கைகளால் தோல்வியுற்றன. அதனால் உண்மையான குற்றவாளிகள் தண்டனையிலிருந்து விடுபடும் நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ‘கம்பெரலிய’வுடன்’ புரண்டு கிடக்கின்றது தமிழ்த் தரப்பு

## நாடாளுமன்றில் டக்ளஸ் சுட்டிக்காட்டு

அரசியல் உரிமையைப் பெறுகின்ற வரை எவரும் அபிவிருத்தி பற்றிப் பேசக் கூடாது என்ற இந்தத் தமிழ்த் தரப்பினர், அபிவிருத்தி என்றாலே அது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகம் என்றவர்கள், எமது பிள்ளைகள் தொழில்வாய்ப்புகளைக் கோரிச் சென்றபோது, தாங்கள் நினைத்தால் பத்தாயிரம் வேலைவாய்ப்புகளையும் பெற்றுத் தரலாம், ஆனால், அப்படி செய்தால் தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வு என்பது பாதிக்கப்பட்டு விடும் என எமது பிள்ளைகளிடம் கூறி, அந்தப் பிள்ளைகளின் கனவுகளை – வாழ்க்கையை அடியோடு சிதைத்த தமிழ்த் தரப்பினர் இன்று ‘கம்பெரலிய’வுடன் புரண்டு கிடக்கிறார்கள் என ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழான கட்டளைகள் – மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான மூன்று அறிவித்தல்கள் தொடர்பில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அபிவிருத்தியே வேண்டாம் என தங்களது அரசியல் வரலாற்றிலேயே கூறி வந்தவர்கள், திடீரென எப்படி இப்போது அபிவிருத்தியில் இறங்கிவிட்டார்கள்? எமது மக்கள் மீது அந்தளவுக்குப் பாசம் வந்துவிட்டதா? என ஆராய்ந்து பார்த்தால், அதிலும் ஊழல், மோசடிகளைச் செய்வதற்குத்தான் இந்த நாடகத்தை இவர்கள் ஆடுகிறார்கள் என்பது தெரியவருகின்றது.

இந்த ஊழல், மோசடிகளை அம்பலத்துக்குக் கொண்டு வரவேண்டும் என அது தொடர்பில் இந்தச் சபையிலே கேள்வி எழுப்பினால், அந்தக் கேள்விக்குப் பதில் வழங்க முடியாமல், தட்டிக் கழிக்கப்பட்டது. இதிலிருந்தே தெரிகின்றது கம்பெரலியவில் இந்தத் தமிழ்த் தரப்பினர் எந்தளவு ஊழல், மோசடிகளை செய்திருப்பார்கள் என்பது.

ஆக, இந்தத் தமிழ்த் தரப்பினர், சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பதை உறுதிபடுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்றே எமது மக்கள் கதைக்கின்றனர்.

அந்த வகையில், எமது பகுதிகளில் இந்த ‘கம்பெரலிய’ கிராமப் பிறழ்வு இந்தத் தமிழ் அரசியல்வாதிகள் அரசை விட்டு பிறழாது இருப்பதற்குக் கொடுக்கப்பட்ட இலஞ்சமாகவே எமது மக்களால் விமர்சிக்கப்பட்டு வருகின்றது – என்றார். (ஐ)

## இனி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றார்கள். அது குறித்து ஒரு நோட்டம் விட்டோம்.

கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் இந்த முயற்சிக்குத் தொகுதிக்கு முப்பது கோடி ரூபா என்ற வகையில் நிதி ஒதுக்கப்பட்டது. அதில் தொகுதி தோறும் இருபது லட்சம் ரூபாத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட எம்.பிக்களினால் உரிய வரைவுகள் சமர்ப்பிக்கப்பட்டு, பூர்த்தியாக்கப்பட்டு வருகின்றன.

எஞ்சிய பத்துக் கோடி ரூபாவுக்கு ஒவ்வொரு தொகுதியில் இருந்தும் திட்டங்களை எதிர்பார்த்திருக்கின்றது சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சின் திணைக்களம். ஆனால் திட்ட வரைவுகள் இன்னும் சென்றடையவில்லையாம்.

இந்த ஆண்டின் அரைவாசிக் காலம் கடக்கப் போகின்றது. இனி எப்போது வரைவு தயாரித்து அனுப்பி, அனுமதி பெற்று, திட்டங்களை ஒப்பேற்றி முடிப்பது என்ற கேள்வி எழுந்துள்ளது.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் மொத்தம் பதினொரு தொகுதிகள். கூட்டமைப்பின் ஐந்து எம்.பிக்களுக்கும் இந்தத் தொகுதிகள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன.

ரணிலின் அரசுடன் கூட்டமைப்பு பொருந்திக் கொண்ட ஏற்பாடு அது.

அதன்படி காங்கேசன்துறையும் யாழ்ப்பாணம் தொகுதியும் – மாவையருக்கு; வட்டுக்கோட்டையும் நல்லூரும் – சராவுக்கு; ஊர்காவற்றுறையும் கிளிநொச்சியும் – ஸ்ரீயருக்கு; கோப்பாயும் மானிப்பாயும் – சித்தருக்கு; எஞ்சிய உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய மூன்றும் – சுமந்திரனுக்கு.

கடைசி ஒதுக்கீடான பத்துக் கோடி ரூபாவைப் பொறுத்தவரை மாவையரின் கீழ் உள்ள இரு தொகுதிகளில் ஒன்றான காங்கேசன்துறைக்கு உரிய முழுத் திட்ட வரைவும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு நேரத்துடனேயே கையளிக்கப்பட்டு விட்டது. மாவையர் சார்பில் அவரின் ‘பினாமி’ போல அத்தொகுதியில் இருக்கும் வலி வடக்கு பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன் இவ்விடயத்தில் அசகாய சூரர். கனகச்சிதமாகத் திட்ட வரைவுகளைத் தயாரித்து மாவையர் அவற்றை நேரத்துடன் சமர்ப்பிக்க அவர் ஒழுங்குபடுத்தியிருப்பார்.

ஆனால், மாவையரின் கீழ் ஒதுக்கப்பட்ட யாழ்ப்பாணத் தொகுதிக்கு திட்ட வரைவு இன்னும் ஒப்படைக்கப்படவில்லை.

இந்த விவகாரத்தில் ஸ்ரீயரும் கொஞ்சம் வேகம் தான். அவரின் கீழ் உள்ள ஊர்காவற்றுறை, கிளிநொச்சிக்குத் தொகுதிகளுக்குரிய – எஞ்சிய தலா பத்து கோடி ரூபாவுக்கான – திட்ட வரைவுகள் கிடைத்து விட்டன என சம்பந்தப்பட்ட அமைச்சு வட்டாரங்கள் உறுதி செய்தன.

ஆனால், இன்னும் மாவையரின் கீழ் உள்ள யாழ்ப்பாணம், சராவின் கீழ் உள்ள நல்லூர் மற்றும் வட்டுக்கோட்டை, சித்தரின் பொறுப்பில் உள்ள கோப்பாய் மற்றும் மானிப்பாய், சுமந்திரன் கையாளும் உடுப்பிட்டி, பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரித் தொகுதிகளுக்கான திட்ட வரைவுகள் எதுவும் இன்னும் வரவேயில்லையாம்.

இந்த வரைவுகள் நேரத்துடன் கிடைத்தால்தான் இந்த ஆண்டு இறுதிக்குள் திட்டங்களை ஒப்பேற்றி முடிக்க இயலும் என்று கவலைப் படுகின்றனர் சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரிகள்.

கம்பெரலியத் திட்டமே தமது அரசியல் கதி என அதில் மூழ்கிவிட்ட கூட்டமைப்பு எம்.பிக்கள், அந்த ஒதுக்கீட்டைத் திரும்பிப் போகாமல் பார்த்துக் கொள்வார்கள் என்று நம்புவோமாக!

★ ★ ★

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை இன்று முற்பகல் 11 மணிக்கு நாடாளுமன்றத்தில் கூட்டியிருக்கின்றார் அதன் தலைவர் இரா. சம்பந்தன்.

பல்வேறு விடயங்கள் பேசப்படவிருக்கின்றன. அதில் முக்கியமானவை கொழும்பில் இந்தியப் பிரதமர் மோடியுடனான சந்திப்பும் பிரதமர் மோடியின் அழைப்பின் பேரில் புதுடில்லிக்கு விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கும் கூட்டமைப்புத் தலைவர்களின் விஜயம் பற்றிய விவகாரமும் ஆகும்.

மீண்டும் பெரு வெற்றியுடனும் அதிக வலுவுடனும் ஆட்சிப் பீடத்துக்கு வந்திருக்கும் பிரதமர் நரேந்திரமோடியின் புதுடில்லி அழைப்புக் குறித்து சம்பந்தனும் ஏனைய கூட்டமைப்புத் தலைவர்களும் அதீத நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டிருக்கையில் –

அவற்றைத் தகர்த்து விடும் வகையில் கூட்டமைப்பின் – தமிழரசுக் கட்சியின் – எம்.பி. ஒருவர் மோடியையும், இந்திய அரசையும் மோசமாக விமர்சித்திருக்கின்றமை சம்பந்தன், சுமந்திரன் தரப்பை பெரும் விசனத்துக்குள்ளும், அதிருப்திக்குள்ளும் ஆழ்த்தியிருப்பதாகத் தெரிகின்றது.

இது குறித்து கொழும்பில் இருக்கும் இந்தியத் தூதரக வட்டாரங்கள் மூலமும் கூட்டமைப்புத் தலைமைக்கு அதிருப்தி தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் சில வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றைய நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து சம்பந்தன் அல்லது சுமந்திரன் பிரஸ்தாபிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர் மோடி மூலம் மீண்டும் ஓர் அழுத்தத்தைக் கொழும்புக்குக் கொடுத்து காரியம் ஏதும் சாதிக்கலாமா என்று கூட்டமைப்புத் தலைமை சிந்தித்துக்கொண்டிருக்கையில், அம்முயற்சி துளிர் விட முன்னரே அதனைக் கிள்ளி எறியும் வகையில் கருத்து வெளியிட்டமையின் பின்னால் பொதிந்திருக்கும் சூத்திரம் யாது, நிகழ்ச்சி நிரல் என்ன என்றெல்லாம் சம்பந்தன் இன்று கேள்விக்கணை தொடுக்கக் கூடும் எனத் தெரிகின்றது.

இவ்வாறு இந்தியத் தரப்பைத் தூற்றித் தமிழரசுக் கட்சி எம்.பி. ஒருவர் பகிரங்கமாகக் கருத்து வெயியிட்டமை, கூட்டமைப்பின் குழு புதுடில்லி செல்வதை இப்போதைக்குத் தாமதப்படுத்தினாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்று சம்பந்தப்பட்ட முக்கிய வட்டாரம் ஒன்று நேற்று என்னிடம் கருத்து வெளியிட்டது.

சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்ற கதையாகி இருக்கின்றது. சம்பந்தப்பட்ட எம்.பியின் மோடி பற்றிய பகிரங்கக் கருத்து விமரிசனம். சம்பந்தன்தான் பாவம். சாண் ஏற முழம் சறுக்கும் இக்கட்டில் அவர் சிக்கியிருக்கின்றார்....!

- மின்னல் -

## முஸ்லிம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யக்க தேரர் வரக்காகொட ஞானரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

யட்டிநுவர, தியகெலினாவ, கித்சிறிமேவன் ரஜமஹா விகாரையில் நடந்த நிகழ்வில் கலந்து கொண்டு பேசியபோது அவர் இவ்வாறு கூறினார்.

சிங்கள இனத்தை அழிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் குறித்தும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முஸ்லிம்கள் சிங்கள மக்களை அழிக்க எடுத்த செயற்பாடுகள் இப்போது பகிரங்கத்துக்கு வந்துள்ளன. எமது மக்கள் கவனமாக இருக்க வேண்டும். டாக்டர் ஒருவர் லட்சக் கணக்கான எமது குழந்தைகளை இல்லாமலாக்கியுள்ளார். இப்படியாக சிங்கள இனத்தை அழிக்க நினைக்கும் தேசத் துரோகிகளைக் கல்லால் அடித்துக் கொல்ல வேண்டுமெனப் பலர் என்னிடம் கூறினர். அப்படிச் செய்யுங்கள் என நான் கூறமாட்டேன். ஆனால் செய்யப்பட வேண்டியது அதுதான். நாட்டையும் மக்களையும் நேசிக்கும் தலைவர்களை மட்டும் மக்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பவேண்டும் – என்றார். (ஐ)

## கோட்டாவின் இரு மனுக்கள் விசாரணையின்றி தள்ளுபடி

கொழும்பு, ஜுன் 19

முன்னாள்பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்த இரண்டு மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விசாரணையின்றித் தள்ளுபடி செய்யப்பட்டன.

டி.ஏ ராஜபக்ஷ நூதன சாலை நிர்மாணிப்பு தொடர்பில் விசேட நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும் வழக்கில் முன்வைக்கப்பட்ட ஆரம்பகட்ட ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இரண்டு மனுக்களே இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டன.

மேன்முறையீட்டு நீதிபதிகளான அச்சல வெங்கப்புலி, அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் இந்த மனுக்கள்நேற்றுவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. (ஐ)

## மகாபோதிக்குக் கத்தியுடன் வந்த முஸ்லிம் பெண் கைது!

### அனுராதபுரத்தில் சம்பவம்

கொழும்பு, ஜுன் 19

பொசன்தினத்தில்அநுராதபுரத்துக்கு வழிபாட்டுக்காகவந்த முஸ்லிம்பெண்ணொருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து கத்தியொன்றும் மீட்கப்பட்டது.

அநுராதபுரம்ஜெயசிறி மகாபோதிக்குள் அவர் நுழைய முயன்றபோது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெள்ளை மேலாடை, பாவாடை அணிந்து வந்த ஒருபெண்ணை சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் சோதனை செய்தனர். அப்போது கத்தியொன்று மீட்கப்பட்டது. கத்தியை அன்றாட தேவைக்காக பாவிக்க வைத்திருந்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

காலியைச்சேர்ந்த சிங்கள குழுவொன்றுடன் வந்த, 38வயதுகெகல்வத்த முஸ்லிம் பெண்ணே கைதாகியுள்ளார். (ஐ)

## புதிய சமுர்த்தி பயனாளிகளிடம் கிளிநொச்சியில் பணம் அறவீடு!

கிளிநொச்சி, ஜுன் 19

புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள சமுர்த்திப் பயனாளிகளிடம் இருந்து தலா 500 ரூபா அறவிட்டு அந்தத் தொகைக்குரிய காசோலையை மாவட்டச் சமுர்த்தி பொது வைப்புக் கணக்கில் வரவு வைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சியில் அனைத்து சமுர்த்தி வங்கி முகாமையாளர்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் திருமதி ஆ.தவபாலன் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளரின் சுற்றறிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும், புதிய சமுர்த்திப் பயனாளிகளின் உரித்துப் பத்திரம் இடும் உறைகள், மேடை தயாரித்தல், அலங்கரித்தல், கதிரைகள் மற்றும் ஏனைய உபரணங்கள், உபசரிப்புக்கள், கவர்ச்சி நடனம் உள்ளிட்ட நான்கு நடன குழுவுக்கான செலவுகள், புதிதாகச் சிந்திப்போம் ஊக்கத்தில் எழுவோம் எனும் தலைப்பிலான பிரசாரம் செய்தல், ரீ சேட்கள் போன்ற செலவுகளுக்கே இந்த நிதியை அறவிடுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 13,078 புதிய சமுர்த்தப் பயனாளிகளிடமிருந்தும் 65 இலட்சத்து 39ஆயிரம் ரூபா பணம் சமுர்த்தி வங்கிகளிடமிருந்து மாவட்ட சமுர்த்தி பொது வைப்புக் கணக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கிரியெல்லவின் அலுவலக அதிகாரிகளுக்கு பிணை

கொழும்பு, ஜுன் 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான 600 கடிதங்களுடன் கைதான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவின் அலுவலக அதிகாரிகள் மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மூவரையும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பெயரைக் குறிப்பிட்டு இன முறுகலை ஏற்படுத்தக்கூடிய சொற்கள் அடங்கிய 600 கடிதங்களுடன் மூவர் கொழும்பு மத்திய அஞ்சல் நிலையத்தில் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்ட மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தௌஹீத் ஜமாத் அமைப்பாளர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

கொழும்பு, ஜுன் 19

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் மாவட்ட அமைப்பாளராகக்கடமையாற்றியமொஹமட் பாறூக் மொஹமட் நவாஸ் என்பவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேகநபரை எதிர்வரும் ஜுலை 2ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறுகொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர் சிறைச்சாலை அதிகாரிகளால் நேற்றுக் கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேகநபர் தொடர்பில் மேற்கொண்ட விசாரணை அறிக்கை வாழைத்தோட்டம்பொலிஸாருக்குவழங்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருள்கள்தொடர்பில்பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பிலான அறிக்கை இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனவும் பொலிஸார் நீதிமன்றத்தில் கூறினர்.

சந்தேகநபரை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், பொலிஸார் வழங்கியபொருள்கள்தொடர்பில் அவசரமாகப் பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு உத்தரவிட்டார். (ஐ)

## மைத்திரி தலைமையில் பொசன் பெரஹரா



கொழும்பு, ஜுன் 19

பொலனறுவை வரலாற்று முக்கியத்துவமிக்க பொசன் பெரஹரா நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் வரலாற்றுச் சிறப்புமிக்க வட்டதாகையவுக்கு அருகில் ஆரம்பமானது.

சங்கைக்குரிய வென்டறுவே உபாலி நாயக்க தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரின் அனுசரணையுடன் மாவட்டத்தின் அரச நிறுவனங்கள், விவசாய சமூகத்தினர், தன்னார்வ நிறுவனங்கள், வர்த்தக சமூகத்தினரது முழுமையான பங்களிப்பில் இந்த வருடாந்த பெரஹரா ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பிரதேசத்தின் மகாசங்கத்தினர், பொலனறுவை நகர பிதா சானக்க சுதத் ரணசிங்க, மாவட்ட செயலாளர் பண்டுக்க அபேவர்த்தன ஆகியோர் உள்ளிட்ட பெருந்திரளான மக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## ஆமி மொஹிதீன் சிக்கினார்!

கொழும்பு, ஜுன் 19

தற்கொலைக் குண்டுதாரி சஹ்ரான் ஹாசிம் தலைமையிலான குழுவினருக்குப் பயிற்சி வழங்கிய ஆமி மொஹிதீன் என்ற இராணுவச் சிப்பாய் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா மற்றும் சில இடங்களில் சஹ்ரான் கும்பலுக்குக் குண்டு வெடிப்புப் பயிற்சி வழங்குவதற்கு இவரே நடவடிக்கை மேற்கொண்டிருந்தார் என தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பின் செயற்பாட்டாளர்கள் சிலர் வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆமிமொஹிதீன் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் காணாமல் போயிருந்தார் எனக் கூறப்படுகின்றது. அவர் குண்டு தொடர்பில் தேர்ச்சி பெற்ற ஒருவராவார்.

## ரயில்வே தொழிற்சங்கங்கள் இன்று முதல் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜுன் 19

இன்று நள்ளிரவு முதல் ரயில்வே வேலை நிறுத்தத்தில் ஈடுபட 5 ரயில்வே தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

இந்த வேலைநிறுத்தப் போராட்டம் இரண்டு நாள்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்தன. (ஐ)

## தௌஹீத் ஜமாத் உறுப்பினரை விடுவிக்க லஞ்சம் வழங்கியவருக்கு நேற்றுப் பிணை

கொழும்பு, ஜுன் 19

கைது செய்யப்பட்ட தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர் ஒருவரை விடுவிப்பதற்காக பொலிஸ் அதிகாரிக்கு இலஞ்சம் வழங்க முயற்சித்த நபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். ஹொரவப்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்த மொஹமட் சிபான் என்ற சந்தேகநபரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டார்.


சந்தேகநபரை 15,000 ரூபா ரொக்கப் பிணை மற்றும் 04 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டார்.

கொழும்பு சங்கரில்லா ஹோட்டலில் நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் அப்துல் மஜீட் மொஹமட் நியாஸ் என்பவர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவரை விடுவிப்பதற்காக ஹொரவப்பொத்தானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு 5 இலட்சம் ரூபா பணத்தை இலஞ்சமாக கொடுக்க முயற்சித்த வேளையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் நேற்று அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இந்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். (ஐ)

## கல்முனை உண்ணாவிரதத்துக்கு ஞானசார தேரரும் ஆதரவளிப்பு





மட்டக்களப்பு, ஜுன் 19

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்தக் கோரி ஆரம்பிக்கப்பட்டுள்ள சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்த நிலையில், இந்தப் போராட்டத்துக்கு ஞானசார தேரரும் ஆதரவு கொடுத்துள்ளார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் இன்னும் இரு தினங்களில் தரம் உயர்த்தாவிடின் மாபெரும் போராட்டம் ஒன்றைக் கல்முனையில்மேற்கொள்ள இருப்பதாகவும் ஞானசாரர் கூறினார்.

கல்முனை வடக்குப் பிரதேசசெயலகத்தைத் தரம் உயர்த்தக் கோரி கல்முனை விகாராதிபதி, இந்துக் குருமார், கிறிஸ்தவ குருமார் மற்றும் தமிழ் இளைஞர்கள் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் கல்முனை விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரரிடம் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டபோது பொதுபல சேனா அமைப்பின் தலைவர்ஞானசாரதேரர்மேற்கண்டவாறுகுறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள விகாராதிபதியின் உடல் நலம் பற்றியும் அவர் கேட்டறிந்தார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## சுமந்திரனின் ஒப்புதல் வாக்குமூலம்

*"முன்னெப்போதும் இல்லாத பலத்த சவாலை இன்று நாம் எதிர்கொண்டிருக்கின்றோம். இது, கஷ்டம் என்று கைவிட்டு நாங்கள் ஓடி விட முடியாதது. நிச்சயமாக இந்தச் சவாலுக்கு முகம் கொடுத்துத் தமிழ் மக்களின் இலக்கை நாம் அடைந்தே தீருவோம்."*

- இப்படிச் சூளுரைத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

*"தமிழ் மக்களின் அரசியல் பயணத்தில் பல வித்தியாசமான தசாப்தங்களைக் கடந்து வந்திருக்கின்றோம். ஆனால் நாங்கள் இன்று இருக்கின்ற சூழல் இதற்கு முன்னெப்போதும் இல்லாத நிலைமையாக இருக்கின்றது."* - என்று அவர் கூறியிருக்கின்றார்.

அவர் தமது இந்த உரையில் தமிழர் எவ்வளவு தூரம் இக்கட்டான நிலையில் சிக்கியுள்ளனர் என்பதை வார்த்தைகளுக்கும் வரிகளுக்கும் இடையில் கோடி காட்டத் தவறவில்லை.

*"எங்களுக்கு உகந்த ஒரு சூழலை நாம் உருவாக்கி விட்டோம் என்று நினைத்திருந்த போது அந்தச் சூழலே எங்களுக்கு மாறானதாகவும், நாங்கள் சறுக்கி விழக் கூடியதாகவும், விழுந்தால் பாரிய காயம் ஏற்படக் கூடியதாகவும் இன்று எங்கள் முன்னால் இருந்து கொண்டிருக்கின்றது."* - என்று அவர் குறிப்பிடும் வாசகங்கள் நோக்கற்பாலவை.

மைத்திரிபால சிறிசேனவுடனும், சந்திரிகா அம்மையாரோடும், ரணில் விக்கிரமசிங்கவுடனும் பல சுற்று தந்திரோபாயப் பேச்சுகள் நடத்தி, மூடிய அறைக்குள் ஏதோ ஓர் இணக்கம் கண்டு, அதனடிப்படையில் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும், பிரதமராக ரணிலும் அமரும் நல்லாட்சி அரசு ஒன்றை உருவாக்குவதற்கு பிரதான பக்கபலமாகத் தமிழ் மக்கள் அமைவதற்குக் காரணமாக இருந்தனர் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்கள்.

எழுத்தில் அல்லது சர்வதேச நாடு ஒன்றின் மத்தியஸ்தத்தில் ஏதேனும் ஓர் இணக்கம் கண்டு கொண்டு, அதன் அடிப்படையில் தமிழர்களின் ஆதரவை மைத்திரி - ரணில் கூட்டுக்கு வழங்கலாம் என்று தமிழர் தரப்பில் கூறப்பட்ட ஆலோசனைகளை எல்லாம் புறம் தள்ளிவிட்டுத்தான் 'நிபந்தனையற்ற' தமிழர் ஆதரவை அத்தரப்புக்கு வழங்குவதற்குத் தமிழர்களை வழிப்படுத்தியது சம்பந்தன் - சுமந்திரன் தலைமை.

இந்த நல்லாட்சி அரசுத் தலைவர்களால் தமிழர்கள் உண்மையில் ஏமாற்றப்பட்டு விட்டார்கள். அவர்கள் நம்மை நடுவீதியில் கைவிட்டு விட்டார்கள் என்றெல்லாம் கடந்த சில வருடங்களாகப் பிற தமிழ்த் தலைவர்கள் எல்லாம் ஒன்றாக வெளிப்படுத்தி நின்றபோது, 'இல்லை, இல்லை சமாதானத் தீர்வுக்கான வாய்ப்புகள் இன்னும் தாராளமாக உள்ளன' என்று நேற்றுவரை நம்பிக்கை அளித்து வந்தவர்கள் சம்பந்தன் - சுமந்திரன் ஆகியோர்தான்.

கூட்டமைப்பின் பிற தலைவர்கள் நம்பிக்கையீனமாகப் பேசிய போதெல்லாம், அதற்கு மாறாக, தீர்வுக்கான வாய்ப்புகள் தொடர்பில் திரும்பத் திரும்ப நம்பிக்கை ஊட்டி நின்றவர்கள் இந்த இரு தலைவர்களும் மட்டும்தான்.

ஆனால் அந்தத் தலைவர்கள் இருவரில் ஒருவரே *"எங்களுக்கு உகந்த ஒரு சூழலை உருவாக்கி விட்டோம் என நினைத்திருந்தோம். அந்தச் சூழலே எங்களுக்கு மாறானதாகவும் நாங்கள் சறுக்கி விழக் கூடியதாகவும், விழுந்தால் பாரிய காயம் ஏற்படுத்தக் கூடியதாகவும் மாறி, இன்று எங்கள் முன் வந்துள்ளது."* - என ஒப்புக் கொள்ளும் பரிதாப நிலைமை ஏற்பட்டிருகின்றது.

மேற்படி விடயத்தை வெளியிட்ட கூட்டத்தில் தோல்வி குறித்தும் சுமந்திரன் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

வாழ்க்கையில் எப்படித் தோல்வியைச் சந்திப்பது, எப்படிக் கையாள்வது, ஏமாற்றங்களுக்கு முகம் கொடுப்பது என்பன குறித்தெல்லாம் பேசியிருக்கின்றார்.

அவரது அந்தப் பேச்சின் வரிகளுக்கு இடையில் சில விடயங்களை நாமாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

நல்லாட்சியை நம்பி ஏமாந்து போனோம், மோசம் போனோம். ஏமாந்தமை மட்டுமல்ல, அது எமது எதிர்காலம் தொடர்பில் எம்மை மிக ஆபத்தான கட்டத்தில் கொண்டு போய் நிறுத்தியிருக்கின்றது. நாங்கள் சறுக்கி விழக் கூடியதாகவும் சறுக்கி விழுந்தால் படுகாயம் ஏற்படுத்தக் கூடியதாகவும் நிலைமை மாறியுள்ளது. முன்னெப்போதும் இல்லாத இந்தப் பலத்த சவாலை - தோல்வியை - ஏமாற்றத்தை - இது ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து நாம் தப்பி ஓட முடியாது. இதற்கு முகம் கொடுத்தேயாக வேண்டும். - இத்தகைய கருத்தை விளக்கும் ஓர் ஒப்புதல் வாக்குமூலமே சுமந்திரனின் இப்பேச்சு.

நல்லது, இப்படி விடயத்தை - நிஜத்தை - நிலைமையை - ஒப்புக் கொண்டு, பகிரங்க வெளியில் அது குறித்து விவாதித்துச் செயற்பட முன் வந்திருக்கின்றமை நல்லதோர் அரசியல் அறிகுறிதான்.

அத்தகைய போக்கில் வெளிப்படையாகச் செயற்படுவது ஆராக்கியமான அரசியல். அது வரவேற்கத்தக்கதே.

# ஜனாதிபதி வேட்பாளர் குறித்து கூட்டு எதிரணி மௌனம் ஏன்?

## வாசுதேவ நாணயக்கார கேள்வி



கொழும்பு, ஜூன் 19

ஜனாதிபதி வேட்பாளரை முடிவு செய்வது தொடர்பில் கூட்டு எதிரணி மௌனம் காப்பது குறித்து ஜனநாயக இடதுசாரி முன்னணி செயலாளர் வாசுதேவ நாணயக்கார அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக சமல் ராஜபக்ஷவின் பெயரைத் தமது தரப்பு பரிந்துரை செய்திருக்கிறது எனக் குறிப்பிட்ட அவர், கோட்டாபய ராஜபக்ஷவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டாலும் அது குறித்தும் ஆராயத் தயார் எனவும் தெரிவித்தார்.

பொரளை என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது ஜனாதிபதி வேட்பாளர் யாரென்பது தொடர்பில் எந்த முன்னெடுப்பையும் காணவில்லை. வேட்புமனுத் தாக்கலுக்கு இன்னும் சில மாதங்களே எஞ்சியுள்ளன. கடந்த காலங்களில் முன்கூட்டியே பிரசாரச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆனால் வேட்பாளர் விடயத்தில் கூட்டு எதிரணி மௌனம் காப்பது ஆச்சரியமாக இருக்கிறது. ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கூட்டு எதிரணிக்குள் பேச்சு நடத்தி முடிவெடுக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

கூட்டு எதிரணியைச் சுற்றித் திரண்டிருக்கும் இலட்சக்கணக்கான மக்கள் வேட்பாளரின் பெயரை அவசரமாக வெளியிடவேண்டும் என எதிர்பார்க்கின்றனர். மக்களின் கோரிக்கையை நாம் நிறைவேற்ற வேண்டும். ஐ.தே.கவுக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டும் செயற்பாட்டைப் பிற்போடுவது பெரும் தவறாகும். எமது வேட்பாளர் யாரென்பதை முடிவு செய்வதனூடாக பல்வேறு விடயங்களைச் சாதிக்க முடியும். சமல் ராஜபக்ஷவின் பெயரை நாம் பரிந்துரைத்தாலும் அவர் தவிர்ந்த வேறொருவரின் பெயர் முன்மொழியப்படுமானால் அது குறித்தும் பேச்சு நடத்தத் தயாராகவுள்ளோம்.

கூட்டு எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டங்களில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டாலும் ஜனாதிபதி வேட்பாளர்கள் தொடர்பில இன்னும் கவனம் செலுத்தப்படாதமை ஆச்சரியமளிக்கிறது - என்றார்.

முஸ்லிம் அமைச்சர்கள் கூட்டாகப் பதவி விலகியது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், முஸ்லிம் வாக்குகள் சிதறிச் செல்வதை தடுக்கும் ஐ.தே.கவின் நோக்கமே இதன் பின்னணியில் இருக்கிறது. வகாப்வாதிகளின் வாக்குகளும் அதனோடு தொடர்புபட்டவர்களின் வாக்குகளும் பிரிந்து செல்வதைத் தடுப்பதே இவர்களது நோக்கமாகும். தற்போது 60 வீதமான வகாப்வாதிகள் இருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது. வகாப்வாதிகளையும் அதனுடன் தொடர்புபட்டவர்களையும் ஒன்றாக வைத்திருக்கும் தந்திரத்தின் பின்னணியில் வேறு நோக்கமே காணப்படுகிறது. கபீர் ஹாசிம் பதவி விலகுவதற்கு வேறு காரணம் இருக்கமுடியாது - என்றார். (ஐ)

# அமெ. படைகள் இங்கு வராதென உத்தரவாதம் கொடுக்க முடியாது

## பாதுகாப்புச் செயலர் கைவிரிப்பு

கொழும்பு, ஜூன் 19

அமெரிக்கப் படைகள் இலங்கையில் கால் வைக்காது என்று தன்னால் உத்தரவாதம் கொடுக்க முடியாது எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சாந்த கோட்டேகொட தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

எவ்வாறாயினும் அவ்வாறு அமெரிக்கப் படைகள் இலங்கைக்கு வரும் என்று நான் நம்பவில்லை. தற்போது பேசப்பட்டு வரும் சர்ச்சைக்குரிய சோபா ஒப்பந்தம் தொடர்பாக நாங்கள் படித்துப் பகுப்பாய்வு செய்துள்ளோம். சில பிரிவுகள் குறித்து சம்பந்தப்பட்ட அமெரிக்க அதிகாரிகளுக்கு எமது கருத்தைத் தெரிவித்துள்ளோம்.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முன்னர் இது அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். எவ்வாறாயினும் நாட்டின் நலன்களுக்காகவே இந்த ஒப்பந்தம் கொண்டுவர திட்டமிடப்படுகின்றது. அது நாட்டினதும் பிராந்தியத்தினதும் ஒருமைப்பாட்டுக்கு எந்தவிதமான அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தாது என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

எமது இராணுவம் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி வருகின்றது. எனவே இலங்கைக்கு வெளிநாட்டுப் படைகள் தேவையில்லை. இதுபோன்ற ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதில் இலங்கை மிகவும் எச்சரிக்கையாக இருக்கும் - என்றார். (ஐ)

# கபீர் ஹாஸிம், அப்துல் ஹலீம் மீண்டும் அமைச்சு பதவியில்?

கொழும்பு, ஜூன் 19

அமைச்சர் பதவிகளைத் துறந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவர், மீண்டும் பதவிகளைப் பொறுப்பேற்கத் தயாராக உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கபீர் ஹாஸிமும் அப்துல் ஹலீமும், தாங்கள் ஏற்கனவே வகித்த அமைச்சுப் பொறுப்புகளை மீண்டும் பொறுப்பேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அவர்கள் அனைவரும், தாங்கள் வகித்த அமைச்சுகளைப் பொறுப்பேற்பார்களா என்பது தொடர்பில் அறிவிக்கப்படவில்லை என்கிற நிலையில், மேற்படி இருவர் மாத்திரம், இப்போதைக்கு மீண்டும் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்கவிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

**வட இலங்கை சங்கீத சபை**

## அறிமுறைப் பரீட்சை ஜூன் 29, 30 இல்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டு பிற்போடப்பட்டிருந்த வட இலங்கை சங்கீத சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான அறிமுறைப் பரீட்சைகள் முன்னைய நேரசூசியின்படி எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம், 9 ஆம் திகதிகளில் இப்பரீட்சை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாளை

20.06.2019
வியாழக்கிழமை
நட்சத்திரம்: உத்தராடம் பி.ப 4.14 வரை.
திதி : திருதியை பி.ப 5.28 வரை.
சித்தம்
இராகுகாலம் : 1.24 - 2.54
சுப நேரம் : 7.24 - 8.54

# கோட்டா போட்டியிட எந்தத் தடையுமில்லை

## கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடுவதற்கு, எந்தத் தடையும் இல்லை என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

கோட்டாபயராஜபக்ஷஎந்தப்பிரச்சினையும் இன்றி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும். அமெரிக்கக் குடியுரிமையைத் துறக்கின்ற ஆவணங்களை அவர் பெற்றுக் கொண்டு விட்டார்.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அமெரிக்கக் குடியுரிமை விவகாரத்தினால் எந்தப் பிரச்சினையும் வராது – என்றார். (ஐ)

# ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. தனித்து வேட்பாளரை நிறுத்தும்

## ஜூலையில் அறிவிப்பு வெளியாகும்

கொழும்பு, ஜூன் 19

இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், ஜே.வி.பி. தனித்து வேட்பாளரை நிறுத்தும் என்று அந்தக்கட்சியின்நிறைவேற்றுக்குழுஉறுப்பினரான லால் காந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் நிறைவேற்றுக் குழுவைச் சேர்ந்தவரே போட்டியிடவேண்டும் என்றும் கட்சி உறுப்பினர்கள் விரும்புகின்றனர்.



வேறெவரையும் நாங்கள் ஆதரிக்கப் போவதில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. சார்பில் போட்டியிடும் வேட்பாளரின் பெயர் அடுத்த மாத தொடக்கத்தில் வெளியிடப்படும் என்று கூறினார்.

# கோட்டா நாடு திரும்பிய பின்பே வேட்பாளர் குறித்துத் தீர்மானம்!

கொழும்பு, ஜூன் 19

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் பல்வேறு ஊகங்கள் கிளம்பினாலும், சிங்கப்பூரிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ திரும்பி வரும்வரை வேட்பாளர் தொடர்பான எந்த முடிவும் எட்டப்படாது என தெரிகிறது.

கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னர், அவருடனும் ஆலோசித்த பின்னரே வேட்பாளர் இறுதி செய்யப்படுவார் எனத் தெரிய வருகிறது.

பொதுஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய கிட்டத்தட்ட உறுதியாக நிலைமையிருந்தது. ஆரம்பத்தில் கோட்டாபயவை வேட்பாளராக்குவதில் மஹிந்த உடன்படாவிட்டாலும், தன்னை வேட்பாளராக அறிவிக்காவிட்டால் தான் தனித்துப் போட்டியிடுவேன் என மஹிந்தவிடமே நேரில் தெரிவித்திருந்தார் கோட்டாபய ராஜபக்ஷ.

கோட்டாவை ஜனாதிபதி வேட்பாளராக்குதில் ஆரம்பத்தில் பஸில், சிராந்தி ராஜபக்ஷ எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். பின்னர், பஸிலை சமரசம் செய்திருந்தார் மஹிந்த. இதனால் குடும்பத்துக்குள் வேட்பாளர் தொடர்பான ஒருமித்த முடிவு கிட்டத்தட்ட ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில் திடீரென இருதய சத்திர சிகிச்சைக்குக் கோட்டாபய உள்ளாகினார். இதனால் அவர் குறிப்பிட்ட காலம் ஓய்வில் இருக்க வேண்டியது அவசியம். குறைந்தபட்சம் 3 மாதங்கள் அவர் ஓய்வில் இருக்க வேண்டியது அவசியம் என்பதால் செப்ரெம்பர் வரை அவர் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது சிரமம். அதைத் தவிர்த்தால், ஜனாதிபதி தேர்தலுக்கு ஒன்றரை மாதங்களே இருக்கும்.

இந்த காலத்தில் கோட்டாபய பிரசாரங்களை முன்னெடுத்து வெற்றி பெறலாமா, ஒன்றரை மாதத்திற்குள் சூறாவளியாகச் சுழன்று பிரசாரத்தில் ஈடுபட வாய்ப்புண்டா என்பதெல்லாம் மஹிந்த முகாமில் யோசனையை தோற்றுவித்துள்ளது.



இதனால் இந்த மாத இறுதியின் பின்னர் நாடு திரும்பும் கோட்டாபயவிடம் வேட்பாளர் விடயமாக பேச்சு நடத்த மஹிந்த தீர்மானித்துள்ளார். கோட்டாபயவின் சம்மதத்துடன் பஸில் ராஜபக்ஷவைக் களமிறக்கலாமா என்றும் மஹிந்த தரப்பில் யோசனையுள்ளது. (ஐ)

யாழ் வண்ணார்பண்ணைப் பிரிவில்

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள வண்ணார்பண்ணை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் வைத்து வழங் கப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக் கொள்ளலாம் என்றும் இவ் வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 30 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்றும் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

**அந்த வகையில் நாளை வியாழக்கிழமை-**

* காலை 9 மணி முதல் 11 மணி வரை – கனகசபை வீதி.

* முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை – சிவகுருநாதர் கோவிலடி சிவகுருநாதர் வீதி.

* பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை – குமாரசாமி வீதி G.S.Office

**நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை–**

* காலை 9 மணி முதல் 11 மணி வரை – ஆத்திசூடி சனசமூக நிலையம்.

* முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை – ஞானக்குழந்தை பாலர் பாடசாலை அரசடி வீதி

* பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை – கலாஜோதி சனசமூக நிலையம்.

# அமெரிக்க இராணுவ நிபுணர்கள் இலங்கைக் கடற்படைக்கு பயிற்சி



## திருகோணமலையில் நடைபெறுகிறது

கொழும்பு, ஜூன் 19

இலங்கைக் கடற்படையினருக்கு அமெரிக்க இராணுவத்தின் சிறப்பு படையைச் சேர்ந்த வான்வழி தரையிறக்க அணியினால் திருகோணமலையில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பலன்ஸ்ஸ்ரைல் 2019/01 திட்டத்தின்கீழ், கூட்டு ஒருங்கிணைந்த பரிமாற்ற பயிற்சி என்ற பெயரில் இந்தப் பயிற்சிகள் கடந்த 13ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கைக் கடற்படையின் சிறப்பு படகு அணியைச் சேர்ந்த 24 பேர் மற்றும், 4 ஆவது அதிவேக தாக்குதல் அணியைச் சேர்ந்த 12 பேர் என மொத்தம் 36 இலங்கைக் கடற்படையினர் இந்தப் பயிற்சிகளில் பங்கேற்றுள்ளனர்.

இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, அமெரிக்க இராணுவத்தின் 19 ஆவது சிறப்புப் படையைச் சேர்ந்த வான்வழி தரையிறக்க அணியின் 10 பயிற்சி நிபுணர்கள் திருகோணமலைக்கு வந்துள்ளனர்.

மூன்று வாரங்களுக்கு நீடிக்கவுள்ள இந்தப் பயிற்சி, ஜூலை 05ஆம் திகதி நிறைவடையவுள்ளது. (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 19

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணியி லிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

மண்டைதீவு, பூம்புகார், மண்கும்பான், அல்லைப்பிடடி , மண்கும்பான் நீர்ப்பாசனம், வெண்புரவி நகர் ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

செட்டிகுளம் ஒரு பகுதி, முகத்தான் குளம், முதலியார்குளம், கப்பாச்சி, துட்டுவாகை, நேரியகுளம், சின்னசிப்பி குளம், NW steel industries இலுப்பை குளம், கஜசிங்கபுர இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் –

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# வடக்கு மாகாண சுற்றுலா தகவல் நிலையத்தின் அங்குரார்ப்பண விழாவும் இறுவட்டு வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூன்.19

வடமாகாண சுற்றுலா தகவல் நிலைய அங்குரார்ப்பண விழாவும் இறுதிவட்டு வெளியீடும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். ரயில் நிலைய வளாகம் மற்றும் வலம்புரி விருந்தினர் விடுதி, யாழ்ப்பாணம் ஆகிய அமைவிடங்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் முக்கியத்துவம் கருதி ஆளுநர் கலாநிதி. சுரேன் ராகவனின் எண்ணக்கருவுக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக வடமாகாண நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கி வரும் சுற்றுலாப் பணியகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் கலாநிதி. சுரேன் ராகவனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் மற்றும் மத்திய அரசின் சுற்றுலா அபிவிருத்தி கிறிஸ்தவ விவகார வனஜீவராசிகள் அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வடமாகாண சுற்றுலா தகவல் மையமானது யாழ் புகையிரத நிலைய வளாகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளதோடு இம் மாகாணத்தில் இனங்காணப்பட்ட சுற்றுலா மையங்களின் அமைவிடங்கள் தொடர்பான விவரணப்படங்களுடன் கூடிய சுற்றுலா மேம்பாட்டிற்கான இறுவட்டு வெளியீடானது வலம்புரி விருந்தினர் விடுதியில் இடபெறுமெனவும் இந்நிகழ்வின் இறுதியில் வெளியிட்டுவைக்கப்பட்ட இறுவட்டின் முதற்பிரதி மற்றும் சிறப்புப் பிரதிகள் வழங்கிவைக்கப்படவுள்ளதோடு இறுதிவட்டுக்களின் விநியோகமும் இடம்பெறுமென வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் பணிப்பாளர் ப. ஜெயராசா அறியத் தருகின்றார்.

# இன்று கொடியேற்றம்

கொடிகாமம், ஜூன்.19

மிருசுவில் – கெற்பேலி கிழக்கு தரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலய மகோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

பத்தாம் திருவிழாவான எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை கடல் தீர்த்தமும், ஞாயிற்றுக்கிழமை பட்டுத் தீர்த்தமும் நடைபெறும்.

காலைக்கதிர் Kalaikathir



# அதிக மக்கள் கொண்ட நாடாக 8 ஆண்டுகளில் இந்தியா மாறும்!

## ஐ.நா. அறிக்கையில் தெரிவிப்பு



ஜெனீவா,ஜூன் 18

அடுத்த 8 ஆண்டுகளில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா முதல் இடத்தை பிடிக்கும் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நா.சபை வெளியிட்டுள்ள உலக மக்கள் தொகை - 2019 என்ற அறிக்கையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக மக்கள் தொகை தற்போது 770கோடியாக உள்ளது. வரும் 2050 ஆம்ஆண்டில்இந்த தொகை 970 கோடியாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 2019 மற்றும் 2050ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், சீனாவில் மக்கள்தொகை 3 கோடி அளவில் குறையும் என கூறப்படுகிறது. ஆனால், இந்தியா உள்ளிட்ட 8 நாடுகளில் மக்கள் தொகை உயர்வு வழக்கம்போலவே இருக்கும். இதனால் உலக மக்கள் தொகையில் பாதியளவு இந்தியா, நைஜீரியா, பாகிஸ்தான், கொங்கோ, எதியோப்பியா, தான்சானியா, இந்தோனேஷியா. எகிப்து, அமெரிக்கா உள்ளிட்ட 8 நாடுகளில் இருக்கும் எனத் தெரிய வந்துள்ளது. இதன் காரணமாக, அடுத்த 8 ஆண்டுகளில் அதிக மக்கள்தொகைகொண்டநாடுகளின் பட்டியலில் இந்தியா முதல் இடத்தை பிடிக்கும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆபிரிக்காவில் தற்போதுள்ள மக்கள் தொகை 2050 ஆம் ஆண்டில் இரண்டு மடங்கு அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர் மின் அழுத்த மின்கோபுரங்களுக்கு அருகே சென்றாலேயே மின் பாய்கின்றது

## எம்.பி. உடலில் வைத்த 'டெஸ்டரில்' விளக்கு எரிந்ததால் பரபரப்பு



ஈரோடு,ஜூன் 19

உயர்மின் அழுத்தம் உள்ள மின்கோபுரங்களுக்கு அருகே சென்றாலேயே மின்சாரம் பாய்வது பற்றிய முறைப்பாடு குறித்து ஆய்வு செய்த போது கணேசமூர்த்தி எம்.பி. உடலில் வைத்த 'டெஸ்டரில்' விளக்கு எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ஈரோடு உள்பட பல மாவட்டங்களில் விளைநிலங்களில் உயர்மின் கோபுரங்கள் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதற்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். உயர்மின் கோபுரங்கள் அருகே சென்றாலோ, அதன்கீழ் விவசாய பணிகளில் ஈடுபட்டாலோ மின்காந்த புலன் பாய்ந்து பாதிப்புகள் ஏற்படும் என்றும் மின்கசிவு ஏற்படுவதாகவும் விவசாயிகள் முறைப்பாடு கூறி வருகிறார்கள். ஆனாலும் விவசாயிகளின் எதிர்ப்பையும் மீறி உயர் மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் ஈரோடு தொகுதி எம்.பி. கணேசமூர்த்தி நேற்று முன்தினம் ஈரோடு மாவட்டம் விஜயமங்கலம் அருகே உள்ள மூணாம்பள்ளி என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள உயர்மின் கோபுரத்தின் கீழ் நின்று ஆய்வு செய்தார். அப்போது உயர்மின் கோபுரத்தின் கீழ் பகுதியில் மின்சாரம் பாய்கிறதா என்பதை கண்டறிய தன்னுடைய உடலில் டெஸ்டரை வைத்து பார்த்தார். உடனே டெஸ்டரில் இருந்த விளக்கு ஒளிர்ந்து மின்சாரம் பாய்கிறது என்பதை காட்டியது. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. உயர்கோபுரம் அருகே சென்றாலே உடலில் மின்சாரம் பாய்ந்து டெஸ்டர் விளக்கு எரிந்ததை அவர் படம் எடுத்துக்கொண்டார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "உயர்மின் கோபுரத்தின் கீழ் நின்றுகொண்டு உடலில் டெஸ்டரை வைத்து பார்த்தால் மின்சாரம் பாய்ந்து விளக்கு எரிகிறது. இதை அறிக்கையாக தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளேன். மேலும் இது குறித்த படங்களை நாடாளுமன்றத்தில் காட்டிப் பேசுவேன். மத்திய சுற்றுச்சூழல் துறை மந்திரி, மின்சாரத்துறை மந்திரியிடமும் இதைக் கொண்டு செல்லப் போகிறேன்' என்றார்.

# ஜப்பானில் ஜி20 உச்சி மாநாட்டின்போது டிரம்ப் - மோடி சந்தித்துப் பேசத் தீர்மானம்



ஜப்பானில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாட்டின் போது, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பும், பிரதமர் மோடியும் வர்த்தக விவகாரம் குறித்து பேச வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஜி20 உச்சி மாநாடானது ஜப்பானின் ஒசாகாவில் வரும் 28 மற்றும் 29ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ளச் செல்லும் பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பை சந்தித்துப் பேசுகிறார். அதேசமயத்தில், இந்தியா – அமெரிக்கா – ஜப்பான் நாட்டுத் தலைவர்களின் பேச்சும் நடைபெற உள்ளது.

டிரம்ப் உடனான சந்திப்பின் போது, இருநாடுகள் இடையேயான வர்த்தக விவகாரம் முக்கிய அம்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவுக்கு வழங்கப்பட்டிருந்த வர்த்தக முன்னுரிமை நாடு என்ற அந்தஸ்தை அமெரிக்கா பறித்தது மற்றும் புதிய வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாகப் பேசக் கூடும் என்று கூறப்படுகிறது.

# திருச்செந்தூர் அருகே றொக்கெட் ஏவுதளம்!

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே குலசேகரன் பட்டினத்தில் றொக்கெட் ஏவுதளம் அமைப்பதற்காக நில அளவீடுகள் செய்யும் பணியை வருவாய்த்துறையினர் தொடங்கியுள்ளனர்.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இரண்டு ஏவுதளங்கள் இருக்கின்றன. தற்போது மூன்றாவதாக புதிய ஏவுதளம் அமைப்பதற்கு உகந்த இடமாக, தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன் பட்டினம் தேர்வு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அங்கு றொக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கான பணியை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் குலசேகரன்பட்டினம், கூடல்நகர், அமராபுரம் பகுதிகளில் சுமார் இரண்டரை கிலோ மீற்றர் சுற்றளவில் சுமார் 3ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் றொக்கெட் ஏவுதளம் அமைக்கப்படுகிறது.

இதற்காகத் திருச்செந்தூர் வட்டாட்சியர் தலைமையில் வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் தலையாரிகள் அப்பகுதிகளிலுள்ள நில அளவீடுகள் மற்றும் மரங்கள் கணக்கெடுக்கும் பணியை மேற்கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொதுப்பணித்துறை நிலமதிப்பீடு பணி முடிந்தபிறகு றொக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசினேன் தேசத்துரோக வழக்கில் வைகோ விளக்கம்

சென்னை,ஜூன்19

2009 ஆம் ஆண்டு நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசினேன்என்று தேசத்துரோக வழக்கில் நீதிபதியின் கேள்விக்கு வைகோ பதில் அளித்தார்.

சென்னை ராணி சீதை மன்றத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த 'நான் குற்றம்சாட்டுகிறேன்' என்ற புத்தக வெளியீட்டு விழாவில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ பேசியபோது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், இந்திய அரசுக்கு எதிராகவும் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டார் என அவர் மீது ஆயிரம் விளக்கு பொலிஸார் தேசத்துரோக வழக்குப்பதிவு செய்தனர்.



இந்த வழக்கு விசாரணை சென்னை கலெக்டர் அலுவலகத்தில் உள்ள சிறப்பு நீதிமன்றில் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் அந்த வழக்கு நீதிபதி சாந்தி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது வைகோ நேரில் ஆஜரானார். இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியங்கள் அடிப்படையில் வைகோவிடம் இருந்து பதிலை பெறுவதற்காக கேள்விகள் அடங்கிய நகல் வழங்கப்பட்டது.

அந்த கேள்விகளுக்கு தனது தரப்பு விளக்கத்தை எழுத்துபூர்வமாக அளிக்க நீதிபதி அவரை அறிவுறுத்தினார். அதற்கு மறுத்த வைகோ, அனைத்து கேள்விகளுக்கும் நேரடியாக பதில் அளிப்பார் எனத் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து நீதிபதி கேட்ட கேள்விகளுக்கு வைகோ பதில் அளித்தார். அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு: –

நான் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசினேன்.

இலங்கையில் ஒவ்வொரு தமிழனின் சாவுக்கும் இலங்கை அரசுதான் பொறுப்பாளி. ராஜபக்ஷ சர்வதேசக் குற்றக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டியவர்.

நான், இந்திய அரசு மீது வெறுப்புணர்வையோ, காழ்ப்புணர்வையோ, பகை உணர்வையோ ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் பேசவில்லை. இந்திய அரசு தனது கொள்கையை, அணுகுமுறையை முற்றாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்று தான் பேசினேன்.

2002 ஆம் ஆண்டு நாடாளுமன்ற மக்களவையில் 'விடுதலைப்புலிகளை நேற்றும் ஆதரித்தேன், இன்றும் ஆதரிக்கிறேன், நாளையும் ஆதரிப்பேன்' என்று பேசியமையைச் சுட்டிக்காட்டி பொதுக் கூட்டத்தில் உரையாற்றியமைக்காக பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டேன். இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்து பேசுவது குற்றம் ஆகாது என்று தீர்ப்பு அளித்தனர். – இவ்வாறு அவர் கூறினார்.

வைகோவின் இந்தப் பதிலை நீதிபதி பதிவு செய்து கொண்டார். இதன்பின்னர், அரசு தரப்பு மற்றும் வைகோ தரப்பு வாதத்துக்காக விசாரணையை இன்றைய தினத்துக்குத் தள்ளி வைத்தார்.

## பாக். இராணுவத்தை விமர்சித்த செய்தியாளர் வெட்டிக்கொலை

பாகிஸ்தானில் அந்நாட்டு இராணுவத்தை தொடர்ந்து விமர்சித்து வந்த செய்தியாளர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தைச் சேர்ந்த பிரபல வலைத்தள கட்டுரையாளர் முகமது திலால் கான். சமூக வலைத்தளங்களில் இவர் மிகவும் பிரபலமானவர். இவரை 'பேஸ்புக்'கில் 16 ஆயிரம் பேரும், டுவிட்டரில் 22 ஆயிரம் பேரும் பின் தொடர்கிறார்கள்.

இந்த நிலையில், நேற்றுக் காலை முகமது திலால் கானுக்கு செல்போனில் ஓர் அழைப்பு வந்தது. அதில் பேசிய நபர் முகமது திலால் கானை குறிப்பிட்ட இடத்துக்கு வரும்படி அழைத்தார்.

அதன்படி அவர் தனது நண்பரை அழைத்துக்கொண்டு அந்த இடத்துக்குச் சென்றார். அங்கு தயார் நிலை



யில் இருந்த மர்மநபர்கள் கத்தி முனையில் அவர்கள் இருவரையும் அடர்ந்த காட்டுக்குள் அழைத்துச் சென்றனர்.

பின்னர் அவர்கள் முகமது திலால் கானை கத்தியால் குத்தி கொலை செய்தனர். அவரது நண்பரையும் கத்தியால் சரமாரியாக குத்தினர். ஆனால் அவர் படுகாயங்களுடன் அவர்களிடம் இருந்து தப்பினார்.

அவர் அளித்த தகவலின் பேரில், பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று முகமது திலால் கானின் உடலைமீட்டு, பிரேதபரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர். கான் தொடர்ந்து பாகிஸ்தானின் இராணுவம் மற்றும் உளவுத்துறையை விமர்சனம் செய்து வந்துள்ளார்.

# கைதிகளின் கலவரத்தில் பராகுவேயில் 10 பேர் பலி

## மேலும் 10 பேர் பலத்த காயம்



அசுன்சியோன், ஜூன் 19

பராகுவே நாட்டில் சிறையில் கைதிகளுக்கிடையே நடந்த மோதலில் 10 பேர் பலியாகினர்.

தென்னமெரிக்க நாடுகளில் ஒன்றான பராகுவே நாட்டின் மத்திய பகுதியில் உள்ள சான் பெட்ரோ நகரில் சிறைச்சாலை உள்ளது. இங்கு நூற்றுக்கணக்கான கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறு மாலை கைதிகளில் இருதரப்பினரிடையே திடீர் மோதல் வெடித்தது. கூர்மையான ஆயுதங்களை கொண்டு கைதிகள் ஒருவரை ஒருவர் சரமாரியாக தாக்கிக்கொண்டமையால், இது பெரும் கலவரமாக மாறியது.

சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக இந்தக் கலவரம் நீடித்தது. இதில் 5 கைதிகள் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டனர். மேலும் 5 பேர் தீவைத்து எரித்து கொல்லப்பட்டனர். இது தவிர மேலும் 10 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

இதையடுத்து கலவரத் தடுப்புப் பொலிஸார் வரவழைக்கப்பட்டு, நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடந்து வருகிறது.

## தென்னமெரிக்க நாடுகளில் திடீர் மின்வெட்டால் பாதிப்பு

தென்னமெரிக்க நாடுகளான ஆர்ஜென்ரீனா மற்றும் உருகுவே ஆகிய 2 நாடுகளில் திடீர் மின் வெட்டு காரணமாக இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

உள்ளூர் நேரப்படி காலை 7 மணிக்கு இந்த மின்வெட்டு ஏற்பட்டது. இதனால் ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. போக்குவரத்து சமிக்ஞைகள் இயங்காதமையால் கடும் போக்குவரத்து நெரிசல் உருவானது. மேலும் மின்வெட்டு காரணமாக குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டது. தகவல் தொடர்பும் முடங்கியது.

இந்தத் திடீர் மின்வெட்டு காரணமாக 2 நாடுகளிலும் லட்சக்கணக்கான மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. மேலும் பிரேஸில் மற்றும் பராகுவேயின் சில பகுதிகளிலும் மின்வெட்டு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

பலமணி நேரங்களுக்கு பிறகு படிபடியாக மின்இணைப்பு சீரடையத் தொடங்கியது.

# சீனாவில் நிலநடுக்கங்களால் 11 பேர் சாவு: 122 பேர் காயம்





பீஜிங், ஜூன் 19

சீனாவின் சிசுவான் மாகாணத்தில் அடுத்தடுத்து இருமுறை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் 11 பேர் பலியாகினர்.

உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) இரவு 10.55 மணிக்கு முதல் நிலநடுக்கம் ஏற்பட்டது. இரண்டாவது நிலநடுக்கம் நேற்றுக் காலை மீண்டும் ஏற்பட்டது. திங்கள் இரவு ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.0 ஆகப் பதிவானது. இரண்டாவது நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.3 ஆக பதிவானது.

அடுத்தடுத்த இரு நிலநடுக்கங்களால் அங்குள்ள மக்கள் பீதியில் உறைந்தனர். உயரமான கட்டடங்களில் இருந்த மக்கள் கட்டடங்கள் குலுங்கியமையை அடுத்து, அலறியடித்தபடி வீதிகளுக்கு வந்தனர். சுமார் ஒரு நிமிடம் நிலநடுக்கத்தின் அதிர்வுகள் நீடித்தன என அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட இடிபாடுகளில் சிக்கி 11 பேர் பலியாகினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 122 பேர் காயம் அடைந்தனர். அண்டை மாநிலமான யுனான் மாகாணத்திலும் நிலநடுக்கத்தின் அதிர்வுகளை உணர முடிந்ததாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

(உ)

## தற்கொலைத் தாக்குதல்களில் நைஜீரியாவில் 30 பேர் சாவு!

நைஜீரியாவில் நடந்த மூன்று தற்கொலை வெடிகுண்டு தாக்குதலில் 30 பேர் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் மத அடிப்படையிலான அரசை நிறுவும் நோக்கில் போகோஹறம் தீவிரவாதிகள் செயல்பட்டு வருகிறார்கள். போகோஹறம் பயங்கரவாதிகளை ஒடுக்குவது இராணுவ வீரர்களுக்கு பெரும் சவாலாக உள்ளது.

போர்னோ மாகாணத்தின் தலைநகர் மயிடுகுரியில், கொடுங்கா என்ற இடத்தில் உள்ள பெரிய அரங்கத்தில் தொலைக்காட்சி மூலம் கால்பந்து போட்டி நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

இதையொட்டி நூறுக்கும் மேற்பட்ட கால்பந்து ரசிகர்கள் அரங்கத்தில் திரண்டு போட்டியை பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது அரங்கத்துக்குள் நுழைந்த தற்கொலைப்படை தீவிரவாதி ஒருவர், தனது உடலில் கட்டிக்கொண்டு வந்திருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தார்.

அவை பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறின. என்ன நடக்கிறது என மக்கள் சுதாரிப்பதற்குள் மேலும் 2 தற்கொலைப் படைத் தீவிரவாதிகள் அடுத்தடுத்து வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

இதில் அந்த பகுதியே அதிர்ந்தது. அரங்கத்தில் இருந்த அனைவரும் அலறி அடித்துக்கொண்டு நாலாபுறமும் ஓட்டம் பிடித்தனர். எனினும் இந்த தொடர் குண்டு வெடிப்பில் 30 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிர் இழந்தனர்.

மேலும் 40 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த தாக்குதலுக்கு போகோ

# எகிப்தின் முன்னாள் அதிபர் மோர்சி விசாரணையின் போது திடீர் மரணம்

கெய்ரோ, ஜூன் 19

எகிப்து முன்னாள் அதிபர் முகம்மது மோர்சி மாரடைப்பால் மரணம் அடைந்தார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எகிப்து நாட்டில் ஜனநாயக முறையில் முதல் முறையாக அதிபராக தேர்வு செய்யப்பட்டவர் முகமது மோர்சி (வயது 67). இவர் அதிபராக இருந்த போது, பதவி விலகக் கோரி கடுமையான போராட்டம் நடைபெற்றது.

இதையடுத்து, ஜூலை 2013 இல் அந்நாட்டு இராணுவம் இவரை வலுக்கட்டாயமாக பதவியில் இருந்து நீக்கியது. அதிபர் மாளிகையின் முன்பு போராட்டம் நடத்தியவர்களைக் கொன்ற குற்றத்திற்காக, முகமது மோர்சிக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

அவர் மீது சுமத்தப்பட்டுள்ள உளவு பார்த்த குற்றச்சாட்டின் வழக்கு விசாரணையின் போது அவர் மயங்கி விழுந்து இறந்துள்ளார்.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை ஒன்றில் மோர்சி திங்கட்கிழமை ஆஜரானார். கண்ணாடி கூண்டுக்குள் இருந்த பேசிய அவர் தம்மிடம் பல இரகசியங்கள் இருக்கின்றன எனவும் அவற்றை வெளியிட்டால் எகிப்தின் நலனுக்குப் பாதிப்பு ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தார். அப்போது திடீரென நீதிமன்றத்திலே அவர் மயங்கி விழுந்தார். மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு முன்பே அவர் உயிரிழந்தார். அவர்



மாரடைப்பால் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், முகமது மோர்சி கொலை செய்யப்பட்டுள்ளார் என அவரது ஆதரவாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.



# ஈஸ்ரர் ஞாயிறு தாக்குதல்:

# தாய், தந்தையரை இழந்து பரிதவிக்கும் சிறார்கள்!

இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்சம்பவத்தின்போது உயிரிழுந்த மற்றும் பாதிக்கப்பட்ட சிறார்களின் தகவல்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் இதுவரை உரிய முறையில் திரட்டப்படவில்லை.

ஈஸ்டர் ஞாயிறு தினத்தின் போது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தில் 257 பேர் உயிரிழந்தமையுடன், 500 இற்கும் அதிகமானோர் காயமடைந்திருந்தனர்.

இந்தச் சம்பவத்தில் பெருமளவிலான சிறார்களும் பாதிக்கப்பட்டனர் என அரசாங்கம் ஏற்கனவே தெரிவித்திருந்தது.

இலங்கையில் சிறார்கள் தொடர்பிலான தகவல்களை திரட்டும் பொறுப்பு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வசமிடம் உள்ளது, இந்த தாக்குதல் சம்பவம் நடைபெற்று சுமார் 56 நாள்கள் கடந்துள்ள போதிலும், உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட சிறார்களின் முழுமையான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

தாக்குதல் நடத்தப்பட்ட நீர்கொழும்பு – கட்டுவாபிட்டிய தேவாலயத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட சிறார்களின் தகவல்கள் மாத்திரமே இதுவரை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் திரட்டப்பட்டுள்ளது.

கட்டுவாபிட்டிய தேவாலயத்தில் 23 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்; அவர்களில் 18 சிறுமிகளும், 5 சிறுவர்களும் அடங்குகின்றனர் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கின்றது.



## அவர்களின் தகவல்களைத் திரட்டுவதில் தாமதம் ஏன்? சட்டச் சிக்கல் ஏன்?

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஒரு சிறுமி காணாமல் போயுள்ளார் என புகார் ஒன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. சம்பவத்தில் 61 சிறார்கள் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் 30 சிறார்களுக்கு சிறு அளவிலான காயங்களும், 31 சிறார்களுக்கு கடும் காயங்களும் ஏற்பட்டுள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கட்டுவாபிட்டிய தாக்குதல் சம்பவத்தில் 19 சிறார்கள் தாயை இழந்துள்ளதுடன், 4 சிறார்கள் தந்தையை இழந்துள்ளனர்.

அத்துடன், தந்தை மற்றும் தாயை இழந்த 3 சிறார்கள் கட்டுவாபிட்டிய பகுதியில் உள்ளனர் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3 சிறார்களுக்கு சட்டத்தின் பிரகாரமான பாதுகாவலர் ஒருவர் அவசியமாக காணப்படுகிறார் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

42 குடும்பங்களைச் சேர்ந்த 78 சிறார்களுக்கு மனநல ஆலோசனைகளை வழங்கும் தேவை காணப்படுவதாக அதிகார சபை குறிப்பிடுகின்றது.

மேலும், 16 சிறார்களுக்கு கல்விக்கு உதவிகளை வழங்கும் தேவை காணப்படுவதுடன், மூன்று குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு வாழ்வாதார தேவையும் அத்தியாவசியம் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டுகின்றது.

இந்நிலையில் ஏனைய பகுதிகளில் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த சிறார்களின் தகவல்கள் ஏன் திரட்டப்படவில்லை என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

> ஈஸ்ரர் ஞாயிறு தாக்குதலில் பெருமளவிலான சிறார்களும் பாதிக்கப்பட்டனர் என அரசாங்கம் ஏற்கனவே தெரிவித் திருந்தது. இலங்கையில் சிறார்கள் தொடர்பிலான தகவல்களை திரட்டும் பொறுப்பு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வசமிடம் உள்ளது, இந்த தாக்குதல் சம்பவம் நடைபெற்று சுமார் 56 நாட்கள் கடந்துள்ள போதிலும், உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட சிறார்களின் முழுமையான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

இலங்கை அரசாங்கத்தினால், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம் 1998ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்டது.

சிறுவர்களின் பாதுகாப்பு, சிறுவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்தல், துஷ்பிரயோகத்திற்கு உட்பட்ட சிறார்களுக்கான சிகிச்சை உள்ளிட்ட சிறார்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் சிறார்களுக்கான சட்டம் வலுவாக உள்ள நிலையில், பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த சிறார்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஏன் தாமதமாக செயற்படுகின்றது என பி.பி.சி தமிழ் ஆராய்ந்தது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் முக்கிய அதிகாரியொருவருடன் இந்த விடயம் தொடர்பில் பேசிய போது –

குறிப்பாக தேசிய பாதுகாப்பு அதிகார சபைக்கு பல சட்டத்தின் பிரகாரம் பொறுப்புக்கள் காணப்படுகின்ற போதிலும், பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் போது பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழுந்த சிறார்களின் தகவல்களை திரட்டுவதற்கு முடியாத நிலைமை காணப்படுவதாக தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்படும் அல்லது உயிரிழக்கும் சிறார்களின் தகவல்களைத் திரட்ட முடியாமைக்கான காரணம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சட்டத்தின் ஒரு சரத்தில் மாத்திரமே வன்முறைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வன்முறைகள் தொடர்பில் சட்டத்திலுள்ள சரத்து

ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர் தொடர்பில் மனிதாபிமான நடவடிக்கைகள்



## மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் பலர்

எடுப்பதற்கும், அத்தகைய பிள்ளைகளின் மன மற்றும் உடல்ரீதியான நலன் உட்பட அவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் மீண்டும் சமுதாய நீரோட்டத்தில் ஒன்றிணைதல் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளை விதந்துரைத்தல் –

1998ஆம் ஆண்டு 50ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தில் இந்த விடயம் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயுதப் போராட்டம் என்றால், இரண்டு தரப்புக்கு இடையில் இடம்பெறும் மோதல் என்ற பொருளை வழங்குவதாக அதிகார சபையின் முக்கிய அதிகாரியொருவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி நடத்தப்பட்ட தாக்குதல், இரு தரப்புக்கான மோதல் கிடையாது என கூறிய அவர், அது ஒரு தரப்பு மாத்திரம் தலையீடு செய்து, தாக்குதல் நடத்தியதாகவே கருதப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சட்டத்தில் காணப்படுகின்ற சரத்துக்களின் பிரகாரம், பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் போது உயிரிழுந்த மற்றும் பாதிக்கப்பட்ட சிறார்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சட்டம் உருவாக்கப்பட்டு, 20 வருடங்கள் கடந்துள்ள நிலையில், தற்போதைய நிலைமைக்கு ஏற்ற வகையில் அதனை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்திற்குள் முக்கிய மூன்று விடயங்கள் தற்போதைய நிலைமைக்கு உள்வாங்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

01.இயற்கை அனர்த்தங்களின் போது உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட சிறார்களின் தகவல்களைத் திரட்டுதல் மற்றும் உதவிகளை வழங்குதல்.

02.பயங்கரவாதத் தாக்குதலின் போது உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட சிறார்களின் தகவல்களை திரட்டுதல் மற்றும் உதவிகளை வழங்குதல்.

03.இணையத்தின் மூலம் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுகின்ற சிறுவர்களை பாதுகாக்கும் வகையிலும், பாதிக்கப்பட்ட சிறார்களின் தகவல்களை திரட்டுதல் மற்றும் உதவிகளை வழங்கும் வகையில் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

இது தொடர்பில் பி.பி.சி தமிழ், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை யின் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.அபயரத்னவிடம் வினவியது.

தாக்குதல் சம்பவத்தின் போது பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த சிறார்களின் தகவல்களை தாம் தொடர்ச்சியாக திரட்டி வருகிறார் என அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் சில வாரங்களுக்குள் தாம் அந்த தகவல்களை திரட்டி ஊடகங்களுக்கு வெளியிட நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சட்டத்தின் சரத்துக்களினால் தமக்கு பெரியளவில் பாதிப்புக்கள் கிடையாது என கூறிய அவர், தமது அதிகாரிகளின் குறைப்பாடுகளுக்கே இந்த தகவல்களை திரட்டுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம் எனவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.அபயரத்ன குறிப்பிட்டார். *

# இராணுவத்தில் 99 வீதமானோர் பௌத்தர்களே!

## கூறுகிறார் படைத் தளபதி



கொழும்பு, ஜூன் 19

இரண்டு இலட்சம் பேரைக்கொண்ட இலங்கை இராணுவத்தில், 2500 பேரைத்தவிர ஏனையோர் அனைவரும் சிங்கள பௌத்தர்களே என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தில் உள்ளவர்களில் 99 வீதமானோர் சிங்கள பௌத்தர்களே யாவர். இரண்டு இலட்சம் பேர் இராணுவத்தில் உள்ளனர். இவர்களில், 1600 கிறிஸ்தவர்களும், 700 முஸ்லிம்களும் இருக்கின்றனர். இந்துக்கள் வெறும் 200 பேரே உள்ளனர்.

எனினும், இராணுவத்துக்குள், இன, மத, சாதி பேதங்கள் எதுவும் கிடையாது என்றும் அவர் கூறினார். (ஐ)

# மைத்திரி – ரணில் சண்டை நாட்டுக்குப் பேராபத்து!

## வேலுகுமார் எம்.பி. சீற்றம்



கொழும்பு, ஜூன் 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமது பதவி நிலையை மறந்து, போட்டி அரசியலில் ஈடுபடுவதானது நாட்டுக்கே பேராபத்தாக அமையும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, கட்சி அரசியலைக் கைவிட்டு எஞ்சியுள்ள காலப்பகுதியிலாவது நாட்டின் நலனை முன்னிலைப் படுத்தி இருவரும் செயற்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார் அவர்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

தொலைக்காட்சிகளில் தற்போது ஒளிபரப்பப்படும் தமிழ் சின்னத்திரை நாடகங்களில் காலை முதல் மாலை வரை மாமியும், மருமகளும் முட்டிமோதிக் கொள்வார்கள். வீட்டின் சாவிக்கொத்தை கைப்பற்றுவதற்கு மருமகளும், அதைத் தக்கவைத்துக்கொள்வதற்கு மாமியாரும் படாதபாடு படுவார்கள். இதனால் வீட்டில் நிம்மதி நிலைக்காது.

இதுபோல்தான் ஜனாதிபதியும், பிரதமரும் தற்போது மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கிடையிலான நீயா, நானா என்ற அதிகாரப் போட்டியால் நாட்டில் அரசியல் குழப்பம் தலைதூக்கியுள்ளது.

அதிலும் குறிப்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாலர் வகுப்பு மாணவர்போல் செயற்பட்டு வருகின்றார். பிரதமரைக் கடுப்பாக்குவதற்காக அமைச்சரவையைக் கூட்டப்போவதில்லை என்றெல்லாம் உளறி வருகின்றார்.

நாடாளுமன்றமும், அமைச்சரவையும் ஜனாதிபதியினதோ அல்லது பிரதமரினதோ குடும்பச் சொத்து கிடையாது. நான் முன்னர் கூறியதுபோல் மாமிக்கும், மருமகளுக்கும் இடையில் சண்டை ஏற்பட்டால்கூட அதனால் இரண்டு குடும்பங்கள்தான் பாதிக்கப்படும்.

ஆனால், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான மோதலானது ஒட்டுமொத்த இலங்கைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துவதற்குப் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருப்பவர்கள் முற்படக்கூடாது.

ஒக்டோபரில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சிக்கவிழ்ப்பு சூழ்ச்சி, 21/4 தாக்குதல் போன்றவற்றால் இலங்கையில் இன்னும் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படவில்லை. இதனால் பொருளாதாரமும் ஆட்டம் கண்டுள்ளது.

இந்தநிலையில், இரு தலைவர்களுக்கிடையிலான முறுகலானது, அரசியல் ஸ்திரமற்ற தன்மையை மேலும் நீடிக்கச்செய்யும். ஆகவே, அதிகாரப் போட்டியைக் கைவிட்டு, நாட்டினதும், நாட்டு மக்களினதும் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு செயற்பட முன்வருமாறு இருவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன் – என்றுள்ளது. (ஐ)

# குருநாகல் வைத்தியருக்கு எதிரான முறைப்பாடுகள் ஆயிரத்தைக் கடந்தன!

கொழும்பு, ஜூன் 19

குருநாகல் மகப்பேற்று வைத்தியர் சேகு சிஹாப்தீன் மொஹமட் ஷாபிக்கு எதிரான மொத்தமுறைப்பாடுகள் 1060 ஆக அதிகரித்துள்ளது.

குருநாகல் தேசிய வைத்தியசாலையில் அவருக்கு எதிராக மொத்தமாக 827 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தம்புள்ளை வைத்தியசாலையில் 164 முறைப்பாடுகளும், தம்புள்ளை பொலிஸ் நிலையத்தில் 69 முறைப்பாடுகளும் இதுவரையில் பதிவாகியுள்ளன.

# வேட்பாளர் பெயர் கூறும் உரிமை மஹிந்தவுக்கு மட்டும்தான் உண்டு



## கூறுகின்றார் குமார வெல்கம

கொழும்பு, ஜூன் 19

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரின் பெயரைக் குறிப்பிடும் உரிமை மஹிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமே உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன கட்சியின் ஜனாதிபதிவேட்பாளரின் பெயர் இதுவரை குறிப்பிடப்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷ இப்போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் தான் எனவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# காணியைக் கேட்டு மாமியாரை மோசமாகத் தாக்கிய மருமகன்!

## நேற்றுமுன்தினம் உடுவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

மருமகன் தாக்கியதில் படுகாயமடைந்த மாமியார் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். அத்துடன், தாக்குதல் நடத்திய மருமகனை சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் உடுவில் அம்பலவாணர் வீதியில் இடம்பெற்றது.



சம்பவத்தில் உடுவில் கடவுள் சந்நிதியில் வசிக்கும் 74 வயதுடைய திருமதி ஜயாத்துரை என்ற வயோதிபப் பெண்ணே கழுத்து மற்றும் உடலில் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் அயலவர்களால் அம்புலன்ஸில் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

வயோதிபப் பெண்ணின் மகளின் கணவரே தாக்குதலை நடத்தியுள்ளார். அவரைச் சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வயோதிபப் பெண்ணின் காணி ஒன்றை தமக்கு எழுதி வழங்குமாறு மருமகனான சந்தேகநபர் கேட்டுள்ளார். ஏற்கனவே சீதனமாக காணி ஒன்று வழங்கப்பட்டுள்ளதால், தன்னிடமுள்ள மற்றைய காணியை தனது மகனான சிறப்புத் தேவையுடைய வருக்கு தேவை என்று மாமியார் கூறி வந்துள்ளார். இந்த நிலையில் காணியை எழுதி வழங்குமாறு மருமகன் மாமியாரைத் தாக்கியுள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ – 07)

# சீன – இலங்கை நட்புறவு வைத்தியசாலையின் நிர்மாணப் பணியை பார்வையிட்ட மைத்திரி!



கொழும்பு, ஜூன் 19

சீன – இலங்கை நட்புறவு வைத்தியசாலையின் நிர்மாணப் பணியை நேற்று முன் தினம் நேரில் சென்று பார்வையிட்டார் ஜனாதிபதி மைத்திரிபால.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015 மார்ச் மாதம் சீனாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின்போது சீன ஜனாதிபதி ஷீ ஜின் பிங்குடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பெறுபேறாகச் சீன அரசின் அன்பளிப்பில் சிறுநீரக வைத்தியசாலை இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

நோய்க்காரணி கண்டறியப்படாத சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நாடெங்கிலுமுள்ள மக்களுக்கு நீண்ட கால தேவையாக இருந்த இந்த வைத்தியசாலை தெற்காசியாவில் மிகப்பெரும் சிறுநீரக வைத்தியசாலையாகப் பொலனறுவை பொது வைத்தியசாலைக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

சீன – இலங்கை நட்புறவு தேசிய சிறுநீரக விசேட வைத்தியசாலைக்கு 2018 ஜூலை 21ஆம் திகதி ஜனாதிபதியால் அடிக்கல் நடப்பட்டது.

204 படுக்கைகள், 100 குருதி சுத்திகரிப்பு இயந்திரங்கள், சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக் கூடம் உள்ளிட்ட நவீன பரிசோதனை வசதிகள் மற்றும் தொழிநுட்ப வசதிகளைக் கொண்டுள்ள இந்த வைத்தியசாலைக்காக 1200 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அங்கு சென்ற ஜனாதிபதி வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளைப் பார்வையிட்டதுடன், அந்த நிர்மாணப்பணிகளை மேற்கொண்டுவரும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி அதன் முன்னேற்ற நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

வைத்தியசாலையின் கட்டட நிர்மாணப்பணிகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில், எஞ்சியுள்ள பணிகளையும் விரைவில் நிறைவு செய்து 2020 ஜூலை மாதம் 30ஆம் திகதி வைத்தியசாலையைப் பொதுமக்களிடம் கையளிக்க முடியுமென்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இவ்வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளை பார்வையிடுவதற்காக அண்மையில் சீன அரசின் விசேட பிரதிநிதிகள் குழுவொன்று கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டதுடன், இந்தத் திட்டத்திற்கும் நியமங்களுக்கும் அமைவாக இதன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சீன அரசு உறுதிப்படுத்தியது.

இந்த வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளை துரிதமாக மேற்கொண்டு சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவி மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

பொலனறுவை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் இந்திக்க சம்பத் குமார உள்ளிட்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)



# வரலாற்று சாதனையுடன் வெற்றியை பதிவு செய்தது பங்களாதேஷ் அணி

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான போட்டியில், வரலாற்று வெற்றியைப் பதிவு செய்துள்ளது பங்களாதேஷ் அணி.

டேன்டொன் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற 23ஆவது போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, ஆரம்பமே சற்று தடுமாற்றத்தை எதிர்கொண்டது.

மேற்கிந்திய தீவுகள் அணி, 3.2 ஓவர்களின் போது 6 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை தனது முதல் விக்கெட்டை இழந்தது. இதன்போது அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான கிறிஸ் கெய்ல், ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனையடுத்து களம் புகுந்த சாய் ஹோப், எவீன் லிவிஸ்சுடன் ஜோடி சேர்ந்து அணிக்கு, சிறந்ததொரு இணைப்பாட்டத்தை பெற்றுக் கொடுத்தார்.

இருவரும் இணைந்து 116 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்த வேளை, எவீன் லிவிஸ் 70 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

இதன்பிறகு களமிறங்கிய நிக்கோலஸ் பூரான் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அடுத்து களமிறங்கிய சிம்ரொன் ஹெட்மியர் அதிரடியாக துடுப்பெடுத்தாடினார்.

அரைசதம் பெற்றிருந்த போது சிம்ரொன் ஹெட்மியரும் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய எதிர்பார்ப்பு மிக்க வீரர் ஆந்ரே ரஸ்ஸல், ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஏமாற்றினார்.

இதனை தொடர்ந்து களம் கண்ட அணித்தலைவர் ஜேஸன் ஹோல்டர், சற்று அதிரடியான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய போதும், அவரால் அணிக்காக பெரிதளவான ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

ஜேஸன்ஹோல்டரும்33ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய டேரன் பிராவோ 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் ஒசேன் தோமஸ் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இறுதி வரை களத்தில் இருந்தார்.

இதற்கமைய மேற்கிந்திய தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 321 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சு சார்பில், மொஹமட் சய்ப்பூதின் மற்றும் முஷ்டபிசுர் ரஹ்மான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், சகிப் ஹல் ஹசன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 322 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு பங்களாதேஷ் அணி, கௌரவமான ஆரம்பத்தை பெற்றுக்கொண்டது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான டமீம் இக்பால் மற்றும் சௌமியா சர்கார் ஆகியோர் ஆரம்ப விக்கெட்டுக்காக 52 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றுக்கொண்டனர்.

29 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை சௌமியா சர்கார் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய சகிப் ஹல் ஹசன் களத்தில் நங்கூரமிட்டார்.

இருவரும் இணைந்து 69 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்த போது, துரதிஷ்ட வசமாக டமீம் இக்பால் 48 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். இதனையடுத்து, களமிறங்கிய முஷ்பிகுர் ரஷீம் ஒரு ஓட்டத்துடன் ஏமாற்றினார்.

இதனைதொடர்ந்து களமிறங்கிய லிடொன் தாஸ், சகிப் ஹல் ஹசனுடன் ஜோடி சேர்ந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார்.

இருவரும் இணைந்து மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்து வீச்சாளர்களை துவம்சம் செய்து, அணியினை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

இருவரினதும் சிறப்பான இணைப்பாட்டத்தின் துணையுடன், பங்களாதேஷ் அணி, 41.3 ஓவர்கள் நிறைவில், வெறும் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை கடந்தது. இதனால் பங்களாதேஷ் அணி, 7 விக்கெட்டுகளால் அபார வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது சகிப் ஹல் ஹசன் ஆட்டமிழக்காது 124 ஓட்டங்களையும், லிடொன் தாஸ் 94 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்து வீச்சு சார்பில், ஆந்ரே ரஸ்ஸல் மற்றும் ஒசேன் தோமஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 99 பந்துகளில் 16 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 124 ஓட்டங்களையும், பந்துவீச்சில் 2 விக்கெட்டுகளையும் சாய்த்த பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் சகிப் ஹல் ஹசன் தெரிவுசெய்யப்பட்டார்.

இப்போட்டியில் சகிப் ஹல் ஹசன் சதம் கடந்து அசத்தியதன் மூலம் பல சாதனைகளை அவர் பதிவு செய்தார்.

இதன்போது சகிப் ஹல் ஹசனும், லிடொன் தாசும் இணைந்து 189 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தனர். இதுவே நடப்பு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் அதி கூடிய ஓட்ட இணைப்பாட்டமாகும்.

உலகக்கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் பங்களாதேஷ் அணி சார்பில், 4ஆவது விக்கெட்டுக்காக பதிவு செய்யப்பட்ட அதி கூடிய ஓட்ட இணைப்பாட்டம் இதுவாகும்.

இந்த போட்டியின் போது சகிப் ஹல் ஹசன், ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 6000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டினார்

2019 மே மாதம் 15ஆம் திகதியிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் சகிப் ஹல் ஹசன், தொடர்ச்சியாக ஐந்து முறை 50இற்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

மேலும், நடப்பு உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் அதிக ஓட்டங்களை பெற்ற வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இதுதவிர உலகக்கிண்ண தொடரொன்றில் அதிக ஓட்டங்கள் பெற்ற பங்களாதேஷ் வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். இதற்கு முன்னதாக 2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண தொடரில் மொஹமதுல்லா 6 போட்டிகளில் 365 ஓட்டங்கள் பெற்றிருந்ததே சாதனை ஓட்டங்களாக இருந்தது.

சகிப் ஹல் ஹசன், நடப்பு உலகக்கிண்ண தொடரில் 4 போட்டிகளில் விளையாடி 384 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். ஆஸ்ரேலியா அணித்தலைவர் ஆரோன் பின்ஞ் 5 போட்டிகளில் விளையாடி 343 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், இந்தியாவின் ரோஹித் சர்மா 3 போட்டிகளில் விளையாடி 319 ஓட்டங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

இந்த வெற்றியின் மூலம் பங்களாதேஷ் மிகப் பெரிய சாதனையொன்றை பதிவு செய்தது. அதாவது உலகக்கிண்ண வரலாற்றில் இதுவரை பங்களாதேஷ் அணி, மேற்கிந்திய தீவுகள் அணியை வீழ்த்தியதே கிடையாது.

ஆனால் தற்போது முதல் முறையாக மேற்கிந்திய தீவுகள் அணியை வீழ்த்தி சாதனைப் படைத்துள்ளது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் அயர்லாந்தில் நடைபெற்ற முத்தரப்பு தொடரிலும் பங்களாதேஷ் அணி, மேற்கிந்திய தீவுகள் அணியை வீழ்த்தி தனது முதல் முத்தரப்பு ஒருநாள் தொடரை வென்று சாதித்திருந்தது. அந்த அனுபவங்களை கொண்டே இப்போட்டியிலும் பங்களாதேஷ் அணி சாதித்துள்ளது.

உலகக்கிண்ண வரலாற்றில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான போட்டியில், சிறப்பான சேஸிங் வெற்றியை பங்களாதேஷ் அணி பதிவு செய்துள்ளது.

இதற்கு முன்னதாக 2015ஆம் ஆண்டு நெல்சன் மைதானத்தில் வைத்து 305 ஓட்டங்களை அயர்லாந்து சேஸிங் செய்ததே சாதனையாக இருந்தது. தற்போது அந்த சாதனை தகர்க்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றியின் மூலம், பங்களாதேஷ் அணி புள்ளி பட்டியலில் ஐந்து புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியது. மறுபுறம் மேற்கிந்திய தீவுகள் அணி, மூன்று புள்ளிகளுடன் ஏழாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டது.



## தமிழக வீரரின் சாதனை அசந்து போன கோஹ்லி

பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் விஜய் சங்கர் முதல் பந்திலே விக்கெட் எடுத்து சாதனை படைத்த நிலையில், அதற்கு கோஹ்லி கொடுத்த பிரதிபலிப்புப் புகைப்படம் ஒன்று சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கிண்ணத் தொடரின் நேற்று முன் தினம் போட்டியில் இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதின, ரசிகர்களால் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்த போட்டியில் இந்திய அணி 89 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் இப்போட்டியில் 5ஆவது ஓவரை புவனேஸ்வர் குமார் வீசியபோது, 4 ஆவது பந்தில், தசை பிடிப்பு ஏற்பட்டது.

இதனால் அவர் பாதியிலே வெளியேற்றப்பட்டார். அதன் பின் மீதமிருந்த 2 பந்துகள் வீச, தமிழகத்தைச் சேர்ந்த விஜய்சங்கர் அழைக்கப்பட்டார்.

பாகிஸ்தான் அணியின் துவக்க ஆட்டக்காரர்களின் விக்கெட்டை வீழ்த்த முடியாமல் இந்திய பந்து வீச்சாளர்கள் திணறிக் கொண்டிருந்த போது, அந்த ஓவரை போட வந்த விஜய்சங்கர் வந்த முதல் பந்திலேயே, இமாம் உல் – ஹக் விக்கெட்டை எல்.பி. டபிள்யூ. முறையில் எடுத்து அசத்தினார்.

இந்த விக்கெட் வீழ்த்தியதன் மூலம் இந்தியப் பந்து வீச்சாளர் ஒருவர் உலகக்கிண்ணத்தில் முதல் பந்தில் விக்கெட் வீழ்த்தியவர் என்ற சாதனையைப் படைத்தார். இதற்கு முன் இந்திய அணியில் யாரும் இப்படி ஒரு சாதனையைச் செய்ததில்லை.

இதற்கிடையில் விஜய் சங்கரைப் பாராட்டி கோஹ்லி கொடுத்த ரியாக்ஷன் போட்டோதான் இப்போது வைரலாகியுள்ளது.

## இருமுறை எச்சரிக்கப்பட்ட பாகிஸ்தான் பந்துவீச்சாளர்!

மான்சஸ்டரில் நடைபெற்ற இந்திய அணிக்கு எதிரான போட்டியில், பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் இரு முறை எச்சரிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஆமிர், பந்துவீசும்போது ஓடிவந்து பந்தை வீசிவிட்டு பிட்சிற்குள் ஓடினார். இதனால் நடுவர் அவருக்கு முதல் எச்சரிக்கை விடுத்தார்.

அதன் பின்னர், ஆட்டத்தின் 5ஆவது ஓவரை ஆமிர் வீசினார். ராகுலுக்கு அவர் பந்துவீசும்போதும், பந்துவீச்சை முடித்து விட்டு 'பிட்'சிற்குள் ஓடி வந்தார்.

இது இரண்டாவது முறை என்பதால் மீண்டும் அவரை நடுவர் எச்சரித்தார். எனவே, இன்னொரு முறை இதேபோல் ஆமிர் 'பிட்'சிற்குள் ஓடிவந்தால், இந்தப் போட்டியில் இனி அவர் பந்துவீச முடியாது.

அவ்வாறு நடந்தால் பாகிஸ்தான் அணிக்கு மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தும். அவ்வேளையில் இந்திய அணி 16 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 101 ஓட்டங்கள் இருந்தது.



### இன்றைய ஆட்டம்

நியூசிலாந்து - தென்னாபிரிக்கா

பிற்பகல் 3 மணி

ICC CRICKET WORLD CUP ENGLAND & WALES 2019

## மகா சங்கத்தினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அரச கொள்கையையே நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அங்குரங்கெத்த, மாதன்வல ரஜமகா விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதூபியில்புனித சின்னங்களைபிரதிஷ்டைசெய்யும் புண்ணிய நிகழ்வில் நேற்றுப் பிற்பகல் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

பல உலக நாடுகளின் தற்போதைய அசாதாரண நிலைமைகளைக் கவனத்திற்கொள்ளும் போது எமது நாட்டில் சகல இனத்தவர்களும் மதத்தவர்களும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழலொன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளமைக்கு பௌத்த கோட்பாடுகளின் அடிப்படையிலான மனித நேய வழிகாட்டுதல்களே காரணமாகுமெனவும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டார்.

அஸ்கிரிய பிரிவின் மகாநாயக்கர் வண. வரக்காகொட ஸ்ரீ ஞானரத்தன நாயக்க தேரரின் தலைமையில் இந்தப் புண்ணிய நிகழ்வு இடம்பெற்றது.

மல்வத்தைப் பிரிவின் அனுநாயக்கர் வண.திம்புல்கும்புரே விமலதம்ம தேரர், அஸ்கிரிய பிரிவின் அனுநாயக்கர் வண. ஆனமடுவே தம்மதஸ்ஸி தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி.திசாநாயக்க உள்ளிட்ட பிரதேச மக்கள்பிரதிநிதிகளும்பெருமளவிலான பக்தர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வாகனத்தையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ குற்றம் சாட்டினார்

இதன் காரணமாகவே தான் எதிர்க்கட்சித் தலைவருக்கான வாகனத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார் எனவும் அவர் கூறினார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது, மஹிந்தவுக்கும் சில அமைச்சர்களுக்கும் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக 57 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றில் பெரும் சர்ச்சை ஏற்பட்ட நிலையில் இது குறித்து கருத்துதெரிவித்தபோதே மஹிந்த மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவருக்கான வீடு, வாகனம் என்பவற்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீண்டும் கையளிக்கவில்லை. இந்நிலையிலேயே தான் இந்தக் கோரிக்கையை விடுத்தார் என அவர் குறிப்பிட்டார். (ஐ)

## விமலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிஷாத் பதியுதீன் சபையில் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில் –

எனது தாயாரின் சகோதரர் ஒருவரின் உறவினர் தெமட்டகொடையில் நடந்த வெடிப்புச் சம்பவத்துக்குக் காரணம் என விமல் வீரவன்ஸ இங்கு குற்றஞ் சாட்டியுள்ளார். எனது தாயாருக்குச் சகோதரர்கள் கிடையாது. தொடர்ந்து பொய்களைக் கூறி வரும் விமல் என் மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எந்த முறைப்பாட்டையும் இது வரை செய்ய வில்லை. அவரின் பொய் அள வில்லாமல் போய்க் கொண்டுள்ளது. என் மீதான குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கின்றேன். இப்படிப் பொய் சொல்லும் விமலின் மூளையைப் பரிசோதனை செய்யவேண்டும் என நான் கோரிக்கை விடுக்கின்றேன் – என்றார். (ஐ)

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில்கூட்டம்நடந்ததாகவும் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பான தெரிவுக்குழு சம்பந்தமாக ஏற்பட்ட முரண்பாடு காரணமாகக் கடந்த வாரம் ஜனாதிபதியினால் அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்படவில்லை. இந்த நிலையில் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சரவை கூடியது.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள்கலந்துகொண்டனர். கூட்டம் சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்றது. இதன்போது சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்து எந்தவொரு கருத்தையும் ஜனாதிபதி முன்வைக்கவில்லை என்று அமைச்சர்கள் தெரிவித்தனர்.

வழமையாக அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படுவதைப் போல, அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பாகவே ஆலோசிக்கப்பட்டதாக அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

விசேடமாகஎந்தவொருவிடயம் தொடர்பிலும் கலந்துரையாடப்படவில்லைஎன்றும்அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பில் உரிய அமைச்சர்களினால் விளக்கங்கள் அளிக்கப்பட்டன எனவும் அவர் கூறினார்.

இதேவேளை,அமைச்சர்களான லகிஜயவர்த்தன, அனோமாகமகே மற்றும் காமினி ஜயவிக்ரம ஆகியோரும் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முக்கியமாக எதுவும் கலந்துரையாடப்படவில்லையெனத் தெரிவித்தனர். (ஐ)

## தீர்க்கமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளின் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமான தினேஷ் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் அரசியல் உறுதிப்பாடற்ற நிலைமை காணப்படுகின்றது. ஜனாதிபதி – பிரதமர் ஆகியோருக்கிடையிலான அதிகாரப் போட்டியால் எவரின் சொல்லைக் கேட்பது என்ற நிலையில் அமைச்சர்கள் உள்ளனர். இந்த அதிகாரப் போட்டியால் நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது. அதேவேளை, பாதுகாப்பும்கேள்விக்குறியாகியுள்ளது.

இவ்வாறான நிலைமை பல மாதங்களாகத் தொடர்ந்து நீடிக்கின்றபடியால்தான் உயிர்த்த ஞாயிறன்று தீவிரவாதிகள் கொடூரத் தாக்குதல்களை இலகுவாக மேற்கொண்டிருந்தனர்.

நாட்டின் அரசியல் உறுதிப்பாடற்ற நிலைக்கு உடன் தீர்வு வேண்டுமெனில் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதே ஒரே வழி. அப்போதுதான் எந்தத் தரப்பின் கையில் ஆட்சியைக் கொடுக்க வேண்டும் என மக்கள் தீர்ப்பு வழங்குவார்கள்.

என்னதான் அதிகாரப் போட்டி இப்போது நிலவினாலும் நாட்டின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே. எனவே, நாட்டின் உறுதிப்பாடற்ற அரசியல்நிலைக்கு அவர்தான் தீர்வுகாண வேண்டும்.

போரால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த நாட்டை மஹிந்த ராஜபக்ஷ அணியேமீட்டெடுத்தது. சகல இடங்களிலும் அபிவிருத்தியை முன்னெடுத்தது. பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. இவையெல்லாம் இன்று அதிகாரப் போட்டியால்வீழ்ச்சியடைந்துள்ளன. நாடு நாசமாகின்றதை நாம் விரும்பவில்லை. எனவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்க்கமான முடிவொன்றை உடனடியாக எடுக்கவேண்டும் – என்றனர். (ஐ)

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியா ராச்சி தெரிவித்தார்.

யாழ். மாவட்டப் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 23 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்றுச் சர்வமத வழிபாடுகளில் இராணுவத்தினர் ஈடுபட்டனர். மாவட்டப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல்தர்ஷன ஹெட்டியாராச்சியின் ஏற்பாட்டில் அவரது தலைமையிலேயே இந்த வழிபாடுகள் இடம்பெற்றன.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளின் பின்னர்ஊடகங்களுக்குக்கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பாதுகாப்புப் படைத்தலைமையகத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு மதவழிபாடுகளில் ஈடுபட்டிருக்கின்றோம். இங்குள்ள மதத் தலங்கள் பலவற்றுக்கும் சென்று விசேட பூசை வழிபாடுகளை மேற்கொண்டோம்.

குடாநாட்டின் பாதுகாப்பு முழுமையாகவே பலப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இதனடிப்படையில் குடநாட்டின் பாதுகாப்பை நன்றாகவே நாங்கள் பேணி வருகின்றோம்.

குறிப்பாக அண்மைக் காலத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களை அடுத்து குடநாட்டின் பாதுகாப்பை அதிரித்திருந்தோம். ஆயினும் இதன் பின்னர் மக்களின் நலன்களுக்காகசிலவிட்டுக்கொடுப்புக்களைச் செய்து தேவையான பாதுகாப்பு நடவடிக்கைளை முன்னெடுத்து வருகின்றோம்.

இங்குள்ள அனைத்து மக்களதும் பாதுகாப்பையும் நாங்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றோம் – என்றார். (ஐ-07)

## மிதக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை யோசனை நேற்று அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் முன்வைக்கப்பட்டது.

இதற்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க எதிர்ப்பை வெளியிட்டார்.

இந்த ஒப்பந்தத்தின்படி, அந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் அந்தக் கப்பல் தொடர்பான விவரங்கள் எதுவும் துறைமுக விவகார அமைச்சர் என்ற வகையில் தமக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றும், தமது அனுமதி வழங்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

பின்னர் இந்த ஒப்பந்தம் தொடர்பான பத்திரத்தைத் துறைமுகவிவகார அமைச்சின் அனுமதியுடன் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கு ரப் கணினி வழங்கும்யோசனையைமீண்டும் நேற்று கல்வியமைச்சர் முன்வைத்தபோதும் அதற்கு ஜனாதிபதியின்ஒப்புதல்கிடைக்கவில்லை. எனவே அந்த அமைச்சரவைப் பத்திரத்தையும் மீள்பரிசீலனை செய்ய தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

## 60 கிலோ கஞ்சா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காமையில் இருந்த வீட்டில் இருந்தும் 60 கிலோ கேரளாக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

சுந்தேகத்தின் பேரில் அந்த வீட்டின் உரிமையாளரை வல்வெட்டித்துறைப்பொலிஸார்கைது செய்துள்ளனர். நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ-07)

## சிறைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'செல்பி' புகைப்படமொன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

சிறை அறைக்குள் இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் 'பேஸ்புக்'கில் பதிவொன்றை இட்டுள்ள பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க,

அனைத்துத் துறைகளின் கவனத்துக்கும். நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள மற்றும் ஹிரு தொலைக்காட்சி அறிந்து கொள்ளவும். சிறையிலிருந்து ஐ.எம்.ஓ. அழைப்பு மூலம் தனது வர்த்தகத்தைச் செய்யும் பிரபல கைதியை அடையாளம் தெரியுமா? – புகைப்பட உதவிச் சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு – என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர் குறித்துஐக்கிய தேசியக் கட்சியில் யாரும் பகிரங்கமாகக் கருத்து வெளியிடக்கூடாது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று முன் தினம் மாலை நடந்தது. இதன்போதே பிரதமர் ரணில் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொது வேட்பாளராக பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா களமிறக்கப்படவுள்ளார் எனச் சில இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கடுமையாக எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக சஜித் பிரேமதாஸ அல்லது சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோரின் பெயர்களும் பரிசீலனையில் உள்ளன. எனினும், சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அந்த வாய்ப்பை ரணில் விக்கிரமசிங்க வழங்கமாட்டார் எனத் தெரியவருகின்றது.

இதனைத்தவிர, ரணசிங்க பிரேமதாஸ மீதான மக்கள் விசுவாசம் சஜித் பிரேமதாஸவுக்கு இருந்த போதிலும், அவருக்கு தலைமைத்துவத் தகைமை இன்னமும் இல்லாத நிலையில் பொது வேட்பாளராக சஜித் பிரேமதாஸ களமிறக்கப்படுவதில் சந்தேகம் இருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இன்னும் சில சிரேஷ்ட உறுப்பினர்களும்ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எதிர்பார்ப்பில் உள்ளனர். இது குறித்து தற்போது பகிரங்கமாக பேசுவது தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்தும் என்பதால் ரணில் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் எனத் தெரியவருகிறது. (ஐ)

## ஜே.வி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் அதன் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு மீண்டும் அமைச்சுப் பதவியை வழங்கவேண்டாம் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

அரசுக்குஎதிராகஜே.வி.பியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது ஜூலை மாதம் 9ஆம், 10 ஆம் திகதிகளில் விவாதம் நடைபெற்று, 10 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படும். (ஐ)

## சுமந்திரனோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், இந்தியப் பிரதமர் மோடி குறித்து வெளியிட்ட கருத்துகளுக்கு பதிலளிக்கும்வகையில்தாம்அனுப்பிவைத்த அறிக்கை ஒன்றிலேயே சம்பத் இப்படிக்கூறியிருக்கின்றார். சம்பத்தின் அறிக்கை அவரது வாசக வடிவத்தில் கீழே தரப்படுகிறது.

இந்திய அரசு – சிறப்பாக பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசு – ஈழத் தமிழ் மக்களுக்குஎதையும்செய்யவில்லை, இனி செய்யப் போவதும் இல்லை என யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சரவணபவன் அறிக்கையாக வெளியிட்டுள்ளார்

இலங்கையிலுள்ள நாளிதழ்களில் செய்தி வெளிவந்ததை பார்த்தேன்.

இலங்கை ஆதிகாலம் தொட்டுச் சிவபூமி. பின்னரே புத்தர்கள் வந்தார்கள். கிறித்தவர்கள் வந்தார்கள். முகமதியர் வந்தார்கள்.

ஈழத் தமிழர்கள் சைவர்கள். அவர்கள் சார்பில் இதுவரை எந்த கட்சியும் பேசவில்லை.

தமிழர் சார்பில் பேசுவோர்கள் கிறித்தவர்களே. அவ்வாறு பேசுவோரின் நோக்கம் சைவர்களைக் கிறித்தவர்கள் ஆக்குவதே.

தூண்டுதல் மதமாற்றத்தையோ, கட்டாய மதமாற்றத்தையோ பிரதமர் மோடி கடுமையாக எதிர்க்கிறார்.

திருக்கேதீச்சரம்திருக்கோயில் கட்டுவதற்கு இந்திய அரசு பல கோடி ரூபாக்களை வழங்கியது.

கோயில் வாயிலில் வரவேற்பு வளைவு உடைத்த கத்தோலிக்க பாதிரிமார்களுக்கு துணை நிற்பவர் திரு.செல்வம் அடைக்கலநாதன்.

மதமாற்றம் ஒன்றையே நோக்கமாகக் கொண்ட மெதடிஸ்த சபையில் துணைத் தலைவராக இருப்பவர் திரு.ஆபிரகாம் சுமந்திரன். மாதந்தோறும் இரண்டு லட்சம் ரூபா சம்பளம் பெற்று மத மாற்றப் பணிகளை மட்டுமே மேற்கொள்பவர் அவரது துணைவியார் திருமதி சாவித்திரி சுமந்திரன்.

தமிழர்களுக்குஎதிரான–சைவர்களுக்கு எதிரான – கடும் போக்குடைய இவர்கள் இருவரும் பிரதமர் மோடியை சந்திக்கப் போனால் பிரதமர் மோடி உதவுவாரா?

ஈழத்தமிழர் சார்பாளராக இவர்கள் போவதை இந்திய அரசு விரும்பவில்லை எனப் பலமுறை எடுத்துக் கூறியுள்ளது

அண்மைக்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. யோகேஸ்வரன் தில்லி வந்த பொழுதும் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்கள் கிறித்தவர்களை உங்கள் சார்பாக அனுப்பாதீர்கள் எனக் கேட்டுக் கொண்டார்கள்.

ஈழத்தமிழர்களுக்கு – சிறப்பாக சைவர்களுக்கு – உதவி வேண்டுமானால் அரசியல் தீர்வைக் கொண்டுவர வேண்டும். ஆனால் சைவத்தலைமை உள்ள கட்சிகள் பாரதப் பிரதமர் மோடியை சந்திக்க வேண்டும்.

தூண்டுதல் மூலமும் கட்டாயமாகவும் மதமாற்றும் கிறிஸ்தவர்களோ, சைவத் திருக்கோயில்களை உடைக்கும் கத்தோலிக்கர்களோ தில்லிக்கு வந்தால், மோடியைச் சந்தித்தால், பிரதமர் மோடியோ அவரது அரசோ ஈழத் தமிழர்களுக்கு நன்மை செய்ய முனையாது என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் திரு சரவணபவன் அவர்களுக்கு தெரிவிப்பது எனது கடமையாகும்.

சைவதமிழர்களுடையநன்மை பேணுகின்ற சைவத்தமிழ்த் தலைமைகளை அனுப்புங்கள். பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசு உங்களுக்கு முற்று முழுதாக உதவும். – என்று உள்ளது.

# தாக்குதலில் பாதிப்புற்றோருக்கு உதவாத அரசு சொகுசு வாகனங்களுக்குக் கோடி ரூபா செலவு!

## ஜே.வி.பி. நேற்றுச் சபையில் சாடல்

கொழும்பு, ஜூன் 19

குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈட்டை வழங்காத இந்த அரசு அதிசொகுசு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு கோடி ரூபாக்களை ஒதுக்குவதாக ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.



நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க இந் தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வின்போது, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷகும் சில அமைச்சர்களுக்கும் வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக 5700 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றில் பெரும் சர்ச்சை ஏற்பட்ட நிலையில், இது குறித்து கருத்து தெரிவித்தபோதே பிமல் ரத்னாயக்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இந்த அரசு நட்டஈட்டை முழுமையாக வழங்கவில்லை. இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவருக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்ய பல இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று அவர் குற்றம் சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல எதிர்க்கட்சித் தலைவருக்கு வாகனம் வழங்குவதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களே எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்று கூறினார். (ஐ)

# வியாழேந்திரனும் ஹிஸ்புல்லாவும் கோட்டாவுக்காக வாக்கு சேகரிப்பர்

## சிறிநேசன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் ஆகியோர் ஒரே மேடையில் நின்று கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக வாக்குச் சேகரிப்பார்கள் எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.



மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக சபாநாயகர் கரு ஜயசூரியவோ அல்லது சஜித் பிரேமதாஸவோ அல்லது ரணில் விக்ரமசிங்கவோ வேட்பாளராகக் களமிறக்கப்படலாம்.

அதேபோல் பொதுஜன பெரமுன சார்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய களமிறக்கப்படலாம்.

அவ்வாறு கோட்டா களமிறக்கப்பட்டால் தற்போது முரண்பட்டு வரும் ஹிஸ்புல்லா மற்றும் வியாழேந்திரன் ஆகியோர் ஒரே மேடையில் நின்று கோட்டாபயவுக்கு ஆதரவாக வாக்குச்சேகரிப்பார்கள் – என்றார். (ஐ)

# கோப் விசாரணைக்குழுவில் சிக்கினார் தொண்டமான்

## வியாழனன்று விசாரணை

கொழும்பு, ஜூன் 19

தொண்டமான் பவுண்டேசனில் நடந்ததாகச் சொல்லப்படும் நிதி முறைகேடுகள் குறித்து விசாரிக்க ஆரம்பித்துள்ள நாடாளுமன்ற கோப் குழு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் எம்.பி. , முத்து சிவலிங்கம் எம்.பி. உட்பட்ட மேலும் சில முக்கியஸ்தர்களை விசாரணைக்கு அழைத்துள்ளது.

இதன்படி நாளை வியாழக்கிழமை ஆஜராகுமாறு நாடாளுமன்ற கோப் குழு இவர்களுக்கு அறிவிப்பை விடுத்துள்ளது.

தொண்டமான் பவுண்டேசனின் நிதி கையாளப்பட்டதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள், இந்தியப் பெண் ஆலோசகர் ஒருவர் நீண்ட காலம் பெரியளவில் சம்பளம் பெற்றமை உட்பட்ட பல விடயங்களை மேற்படி கோப் குழு விசாரித்து வருகிறது. (ஐ)

# காயமடைந்த யானைக்குச் சிகிச்சை



வவுனியா, ஜூன் 19

வவுனியா பாலமோட்டைப் பகுதியில் காயமடைந்த நிலையில் பல நாள்களாக நின்ற யானைக்கு நேற்றுக் காலை சிகிச்சையளிக்கப்பட்டது. கால்நடை வைத்தியரினால் யானைக்கு சிகிச்சையளிக்கப்பட்டு அது காட்டுக்குள் அனுப்பப்பட்டது.

வவுனியா பாலமோட்டை குளத்துக்கு அருகே கடந்த ஐந்து தினங்களாக நடக்க முடியாமலிருந்த காட்டு யானை ஒன்றை அவதானித்த அந்தப் பகுதி கிராம மக்கள், கடந்த சனிக்கிழமை ஓமந்தைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் அங்கு சென்ற பொலிஸார் வனஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் உதவியுடன் யானைக்கு அருகில் சென்று யானையின் நிலைமைகளை அவதானித்தபோது அது காலில் காயமடைந்து காணப்பட்டது. இதையடுத்து நேற்றுக் காலை வடபிராந்திய வனஜீவாரிகள் திணைகளத்தின் கால்நடை வைத்திய அதிகாரி பா.கிரிதரன் அப்பகுதிக்குச் சென்று காட்டு யானைக்கு சிகிச்சையளித்தார்.

யானைக்குக் கட்டுத்துப்பாக்கி வெடித்து காயம் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மிகவும் சிரமத்துக்கு மத்தியில் இரண்டு மணித்தியாலயமாக மேற்கொண்ட மருத்துவச் சிகிச்சையின் பின்னர் யானை காட்டுக்குள் அனுப்பிவைக்கப்பட்டது.

தொலைவிலிருந்து துப்பாக்கி மூலம் ஊசி மருந்து யானைக்குச் செலுத்தப்பட்டது. (ஐ)

# ஷாபிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!



கொழும்பு, ஜூன் 19

குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்தியர் ஷாபிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி அக்மீமன பிரதேச சபையின் உபதவிசாளர் ஏ.கே.சுகத் உள்ளிட்டவர்கள் நேற்றுக் காலை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அக்மீமன பிரதேசசபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். வைத்தியர் ஷாபியால் பாதிக்கப்பட்ட தாய்மாருக்கு நட்டஈடு வழங்குமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

# யாழ். படைத் தலைமையகத்தின் ஆண்டு நிறைவுக்காக வழிபாடு

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். மாவட்டப் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 23 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இராணுவத்தினர் சர்வமத வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதற்கமைய அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள கிறிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் மதத் தலங்களில் விசேட பூசை வழிபாடுகளை மேற்கொண்டனர்.


யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் ஏற்பாட்டில் அவரது தலைமையிலையே இந்த வழிபாடுகள் நேற்று இடம்பெற்றன.



இந்தப் பூசை வழிபாடுகளில் மாவட்ட இராணுவ உயர் அதிகாரிகள் இராணுவச் சிப்பாய்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ -07)

# மண்டைதீவில் சுற்றுலா மையத்தை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை!





யாழ்ப்பாணம், ஜூன் 19

மண்டைதீவு எக்கோ சுற்றுலா மையத்தைத் துரிதகதியில் இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச செயலகம் முன்னெடுக்கவேண்டும் என பிரதேச சபையினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை வேலணை பிரதேச செயலகம் ஏற்றுக்கொண்டு அதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவும் அனுமதி வழங்கியுள்ளது.

வேலணைப் பிரதேசத்தில் உள்ள இயற்கை வளத்தைப் பயன்படுத்தி அங்கு ஓர் சுற்றுலா மையத்தை அமைக்கவேண்டும் எனப் பிரதேச சபையினால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அதற்கான அனுமதியும் பிரதேச செயலகத்திடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது.

அதன்பிரகாரம் வேலணைப் பிரதேசத்தின் ஆளும் கட்சியான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினால் கொண்டு வரப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவும் பிரதேசத்தின் நலன் கருதியும் இந்தத் திட்டத்துக்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதாக உபதவிசாளர் நடனசிகாமணி தெரிவித்தார்.

தீவக மக்களின் குறிப்பாக வேலணை பிரதேசத்தில் வாழும் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்து வரும் சுற்றுலா மையம் நிறுவுவது தொடர்பிலான அந்தப் பகுதி மக்களுடைய காத்திருப்புக்கு உரிய பலாபலன் கிடைத்துள்ளதாகவும், இதனூடாக அந்தப் பகுதி அபிவிருத்தியில் மேலோங்கும் அதேவேளை, குறித்த பகுதிக்கான பொருளாதாரத்தையும் மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளும் எட்டப்பட்டுள்ளன எனவும் துறைசார்ந்த நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.06.2019 இல் வெளியிடப்பெற்றது.